நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி: 3
தொகுதி: 112
திருவள்ளுவர் ஆண்டு 2049

விலை: ரூ.20
மார்ச் - 2018

நான்காம் தமிழ்ச் சங்கம்-மதுரை 14.09.1901 THE FOURTH TAMIL SANGAM, MADURAI

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்ப முரளி**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறியாளர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. சிலப்பதிகாரப் புதையல்கள் - ஊடகன் 6
- முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. வினைவலிது 13
- பேராசிரியர் இரா.கோதண்டராமன்

4. உளவியல் பார்வையில் குறுந்தொகைப் பாடல்கள் 24
- பேராசிரியர் ப.மருதநாயகம்

5. திருக்குறளில் பொதுக்கூற்றுக்களும் பொருண்மை அடுக்கும் 30
- முனைவர் ம.திருமலை

6. செந்தமிழ்க் கல்லூரி வைரவிழா 34

7. சங்கச் செய்திகள் 39

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

தமிழறிஞர் இரா.இளங்குமரனார் சிலப்பதிகாரப் புதையல்கள் என்னும் தலைப்பில் ஊடகன் என மறையவன் மாடலனை அறிமுகப்படுத்துகிறார். இக்காலத்தில் ஊடகங்கள் அறிமுகப்படுத்தும் கழுவாய், சடங்கு, வேள்வி அதனை வழிநடத்தும் சாத்திரச் சொல்லாடல்கள் எனப் பல்வேறு பழங்கதைக் கட்டமைப்புக்களை சிலம்பு மாடலமறையவன் வழி அறிமுகப்படுத்துவதை ஊடகன் என்னும் தலைப்பில் ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். பழைமையான சமூகத்தில் இத்தகைய கதைகளும் பழக்க வழக்கங்களும் உலகெங்கும் காணப்படும் செய்தியாகும்.

அறிவுநெறிபோற்றும் கல்விஅறிவுசார்ந்த சமுதாயத்தில் முடைநாற்றம் மிக்க பழையபழக்க வழக்கங்கள் மதிப்பிழந்து விடுகின்றன; அறிவியல் பார்வையோடு வாழ்க்கைக் கட்டமைப்பு உறுதி செய்யப்படுகிறது. வாழ்வு சிறப்புறுவது அறிவியல் சிந்தனையோடு கூடிய உடல்நலம் பேணல், கல்விவளர்ச்சி, தொழில்நுட்பக் கட்டமைப்பு, மனிதசமூகம் முழுவதையும் தாம் எனப் பார்க்கும் ஒருமைப்பாடு ஆகிய உயர் ஆக்க வளர்ச்சியை உள்ளடக்கியதாகும்.

இன்றைய ஊடகங்கள் மூடக்கதைகளையும் மானிட இனத்தை வேறுபடுத்திப் பகைமை உணர்வு, பழிவாங்கும் மனித மனம், மூளை அணுக்களைச் சிதைப்பன போன்றவை காட்சிப்படுத்தப்படுவது துக்கம் தருவதாகும். மாடலமறையவன் வழி இத்தகு காட்சிகள் படைக்கப்பட்டிருப்பதை ஆசிரியர் எடுத்துரைப்பது சிந்தனைக்குரியதாகும்.

மொழியியல் அறிஞர் பேராசிரியர் இரா.கோதண்டராமன் "வினைவலிது" என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை தெலுங்கு - தமிழ் இருமொழி சார்ந்த மொழி ஆய்வுக்கட்டுரை. தமிழ் மாணவர்கள் ஆசிரியர்கள் பன்முறைப் படித்துப் பயன்பெறத்தக்க கட்டுரை. கற்று இன்புறுக.

தமிழ்ப்பேராசிரியர் ம.திருமலை அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தில் 1980களில் பணியாற்றினார். அக்கால கட்டத்தில் மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் தாம் எழுதிய திருக்குறள்

உரைவளத்தை மீள் ஆய்வு செய்து திருக்குறள் உரைக்களஞ்சியமாக பல தொகுதிகள் வெளியிட்டார். அந்நூலுள் பல்வேறு உரைத்தொகுப்பும் ஆய்வும் சிறப்புற அமைந்துள்ளது. பேராசிரியர் ம.திருமலை திருக்குறள் உரைக்களஞ்சியத்துள் ஆழங்கால் பட்டு பல்வேறு நுட்பமான செய்திகளை எடுத்துரைப்பது மிக்க பயனுடையதாகும். மகாவித்துவான் உரைக்களஞ்சியச் சிறப்பு பேராசிரியர் ம.திருமலை போன்ற அறிஞர் விளக்கத்தால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் "நவில்தொறும் நூல் நயம்" என்னும் இன்பப் பேற்றை வழங்குவதாகும்.

ஆழ்சிந்தனை விளைவாகப் பொதுக் கருத்துருவாக்கம் செய்து ஏற்றுக்கொள்ளக்கூடிய உளவியல் கோட்பாடுகளை மேலைநாடுகளில் உளவியல் அறிஞர்கள் உருவாக்குகின்றனர். பல்கலைக்கழகங்களில் ஆசிரியர், மாணவர்கள் அவற்றுக்கு விளக்கம் தேடுகின்றனர். குறுந்தொகைப் பாடல்கள் வாழ்க்கையின் மறுபதிப்பாக உளவியல் கட்டமைப்பைப் பெற்றிருப்பதை ஆசிரியர் ப.மருதநாயகம் எடுத்துரைக்கும் செய்தி பலமுறை சிந்தித்துக்கற்று இன்புறத்தக்கதாகும்.

பொங்கித் தழைத்திடும் எங்கள் மனமெனிற்
போற்றி மகிழோமோ? - தமிழ்ச்
சங்கம் நிறுவிய எங்கள் துரையெனச்
சாற்றி மகிழோ மோ?
தங்கத் துரைப்பாண்டித் தேவரின் சீர்த்தியைத்
தாங்கித் திரியோமோ? - இனி
எங்கும் தமிழ்வளம் பொங்க நறும்பணி
ஏற்றுப் புரியோமோ?

- பாவலரேறு ச.பாலசுந்தரம்

சிலப்பதிகாரப் புதையல்கள்

9

ஊடகன்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

செங்குட்டுவன் தன் பரிவாரம் சூழ நெடுவேலான் குன்றம் எய்தினான். அவனுடன் தேவியும், இளங்கோவடிகளும் மதுரைச் சாத்தரும் இருந்தனர்.

குன்றக்குறவர் செங்குட்டுவனை வணங்கிப் பரிசுகள் பற்பல வழங்கினர்.

மலைவேங்கை மரநிழலில் நின்ற கண்ணகியாரை, "யாவிரோ?" என அவர்கள் வினவியதையும்,

"மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கிழந்துபோந்த கடுவினையேன் யானென்றாள்"

என்றதையும் நாடாள் வேந்தனிடம் உரைத்தனர்.

வானவர் மலர்பொழிந்து விண்ணகம் கொண்டு சென்றதையும் உரைத்தனர். அவர்களே,

"எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டாங்கண் நினைப்பினும் அறியேம்" என

வினாவினர்.

ஆங்குநின்ற சாத்தனார் மதுரையார் ஆதலால்,

ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்

எனத் தொடங்கி மதுரை நிகழ்ச்சிகளைக் கூறினார்.

சிலம்பால் கோவலன் கொலை, கண்ணகி வழக்குரை, மன்னனும் தேவியும் ஒருங்கே இறத்தல் ஆயவற்றைச் சொல்லி,

"கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி இறைக்குரைப் பனள்போல்
தன்னாட் டாங்கண் தனிமையில் செல்லாள்
நின்னாட் டகவயின் அடைந்தனள் நங்கை"

என்று தாம் அறிந்த செய்திகளை உரைத்தார்.

மதுரை நிகழ்வுதான் கோவல கண்ணகியர் செய்தியா? மற்றவையெல்லாம் இளங்கோவும் பிறரும் அறிய வாய்த்த வாய்ப்பாக -

கதைப் பரப்பாளியாக - ஒருவன் சிலம்பில் இடம் பெறுகிறான். அவன் 'மாடலன்' என்பான்.

மாடலன் மறையோன்; தலைச்செங்காடு என்னும் ஊரினன்; இமயம் தொட்டுக் குமரிவரை 'யாத்திரை' செல்பவன். அவன் வழியாகவே சிலப்பதிகாரக்கதை கிடைக்க வாய்த்ததாம். கொலைப் பகுதியொடு தலைப்பகுதியும் கடைப்பகுதியும் அறிந்தவன் அவனே. இளங்கோவடிகள் அவனைக் கொண்டே கதையைப் பெரிதும் நகர்த்துகிறார்.

கோவல கண்ணகியர் கவுந்தியடிகள் துணையொடு மதுரையைச் சார்ந்த புறஞ்சேரியில் தங்கியுள்ளனர். குமரிக்குச் சென்று ஆங்கிருந்து வடபால் மீளும் மாடலன் கவுந்தியடிகள் இருந்த புறஞ்சேரிப்பகுதியை அடைந்து வழி நடந்த களைப்பை ஆற்றச் செல்கிறான். ஆங்குக் கோவலனைக் காண்கின்றான். கோவலன் மாடலனை அறிந்தவன் ஆதலால் அவனை வணங்குகின்றான். அப்பொழுது மாடலன் கூறுகின்றான்.

அரசு பாராட்டும் வணிகச் செல்வன் கோவலன் முன்னோர் என்பதையும், தலைக்கோல் சிறப்புடைய மாதவியுடன் கோவலன் கூடி வாழ்ந்து மணிமேகலையைப் பெற்றதையும், அக்குழந்தைக்குக் கோவலன் முன்னோன் ஒருவன் மணிபல்லவத்தில் கப்பல் கவிழ மணிமேகலை என்னும் தெய்வம் காத்ததை எண்ணிப் பெயரிட்டதையும், அப்பெயர் சூட்டு நாளில் அவன் பெருங்கொடை புரிந்ததையும் அவன் கொடையைப் பெற வந்த மறையோன் ஒருவனை மதங்கொண்ட யானை கையால் பற்றிக் கொள்ள, உடனே கோவலன் அவ்யானையை அடக்கி அது கைப்பற்றிய மறையோனைக் காத்த அருளொடு கூடிய புறமாண்பினையும்,

பார்ப்பனி ஒருத்தி தன் குழந்தையை வீட்டில் விட்டு வெளியே சென்று மீள, குழந்தையின் காவலுக்கிருந்த கீரிப்பிள்ளை ஆங்குவந்த பாம்பைக் கொன்றதால் பட்ட குருதியைக் குழந்தையைக் கொன்றதாகக் கருதி அக்கீரியைக் கொன்ற மனைவியொடு வாழேன், இத்தீவினைக்கு நீ கழுவாய் செய்தால் அன்றி மீளேன் என வடபுலம் செல்லும் பார்ப்பனன் இன்ன கழுவாய் என வடமொழியில் எழுதித்தர, அதனைக் கையில் எடுத்துக்கொண்டு தெருத்தெருவாக அலைய, அவன் கணவன் எழுதிய கழுவாயைச் செய்து அவனையும் தேடி அழைத்துக் குடியொடு நன்கு வாழுமாறு வேண்டும் செல்வம் மிக வழங்கிய கொடைச் சிறப்பையும்

கற்புடையாள் ஒருத்தியைப் பழி சுமத்திய பொய்மையன் ஒருவனை, பொய்மையரை அடித்துண்ணும் பூதம் பற்றிச் செல்ல அதனைக் கண்டு அவன் தாய் அலற அஃதறிந்த கோவலன் அப்பொய்யனுக்காகத் தன்னுயிரைக் கொண்டு அவனை விடுக்க வேண்ட,

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பீங் கில்லை"

என்று கூறி அக்கீழோனைப்பூதம் அடித்துண்ண, அவன் தாயைத் தன் தாயாய் ஏற்று வேண்டுவ புரிந்து அவள் அவலம் போக்கிய வறுமையரைக் காக்கும் வண்மையையும் எடுத்துக் கூறினான். மேலும்,

இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பால நீ"

என்றதும் மாடலன் கூறிய வரலாற்றுக் குறிப்புகளாம்.

புறஞ்சேரியில் பொல்லாத கனவு கண்ட கோவலனைக் கவுந்தியடிகள் மதுரை மாநகர்க்குப் புறப்படு என்றபோது உடனிருந்தவனும், உடன்போகச் சொன்னவனும் அவனேயாம்.

செங்குட்டுவன் வடபுலம் சென்று கல்லெடுத்து நீர்ப்படை கங்கையில் செய்து அதன் தென்கரையில் இருந்தபோது மாடலன் ஆங்குத் தோன்றுகின்றான்.

"வாழ்க எங்கோ"

என வாழ்த்தி, "மாதவி மடந்தை, கானற்பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது" என்று புதிர் போடுவதுபோல் செய்தி உரைத்தான். அதனைக்கேட்ட செங்குட்டுவன்,

"பகைப்புலத் தரசர் பலரீங் கறியா
நகைத்திறம் கூறினை நான்மறை யாள
யாதுநீ கூறிய உரைப்பொருள் ஈங்கு"

என்றான்.

மாடலன், பூம்புகார்க் கடற்கரைக் கானற் பாணியையும் ஊழ்வினை உருத்ததையும், மதுரைக்குக் கண்ணகியொடு கோவலன் வந்ததையும், பாண்டியன் இறப்பையும், கண்ணகி

சேரநாடு புகுந்ததையும் அதனால் கனகவிசயர் தலையில் கடவுட் கல் ஏற்றப்பட்டதையும் விரிய உரைத்தான்.

பின்னர்த் தான் வடபுலம் வந்ததையும் அதன் காரணத்தையும் உரைத்தான்.

யான், பொதியமும் குமரியும் சென்று மதுரைக்கு வந்தபோது,

வலம்படு தானை மன்னவன் தன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை என்றலும்
தாதெரு மன்றத்து மாதரி எழுந்து
கோவலன் தீதிலன் கோமகன் பிழைத்தான்
அடைக்கலம் இழந்தேன் இடைக்குல மாக்காள்
குடையும் கோலும் பிழைத்த வோஎன
இடைஇருள் யாமத்து எரியகம் புக்கதும்,

கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்ததும் உரைத்தான். மதுரைக்கு நேர்ந்ததையும் முழுதுற உரைத்தான். பின்னர், என் ஊராம் தலைச் செங்காடு சென்று இந்நிகழ்ச்சிகளை யான் கூறக் கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்ததை அறிந்த கோவலன் தந்தை மாசாத்தன் துறவு கொண்டதும், கோவலன் தாய் இறந்ததும், கண்ணகியின் தந்தை துறவு கொண்டதும் அவள்தாய் இறந்ததும் மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்டதும் கூறினான். என் சொல்லால் இத்தனை இன்னல்கள் நேர்ந்தமையால் அதன் கழுவாயாகக் கங்கையாடப் போந்தேன்" என்றான்.

இவற்றை அமைந்து கேட்ட செங்குட்டுவன்,

"தென்னவன் நாடு செய்தது ஈங்கு உரை"

என்றான். மாடலன்,

கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டி"யதை உரைத்தான்.

வெற்றிவேற் செழியன் அரியணை ஏறி ஆட்சி நடத்துவதையும் உரைத்தான்.

மாடலன் வழியே பூம்புகார்ச் செய்தியும் மதுரைச் செய்தியும் செங்குட்டுவன் அறிந்து கொண்டதன் வழியாகக் கதைப் பகுதிகளை

அப்படி அப்படி உரைத்தவன் மாடலன் என்பதை அறிகிறோம். செங்குட்டுவன் தன்நிறை அளவு 50 துலாம் பொன் வழங்கினான் மாடல மறையோனுக்கு. ஒரு துலாம் 100 பலம் என்பது பழநாள் கணக்கு.

வஞ்சிக் காண்டச் செய்தியோ அடிகள் நேரில் அறிந்ததும், தம் நாட்டு நடைபெற்றதும் வடநாட்டு நடைபெற்றதும் கண்டும் கேட்டும் அறிந்தவை ஆதலின் கதை முழுமையுற வாய்த்ததாம்.

இனி, மாடலன் இவ்வளவொடும் நின்றான் அல்லன். வடபுல வெற்றியைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் உரைக்கச் சென்ற தூதர்கள் அஞ்சிச் சென்றோரையும், துறவரையும் வென்றது வெற்றியாகாது என வேந்தர் இருவரும் உரைத்ததாகத் தூதர் சொல்லச் செங்குட்டுவன் சினந்தான். அப்பொழுது மாடலன்,

இகழாது என்சொல் கேட்டல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந்து இரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை

என்று பல்பல எடுத்துக்காட்டுகளுடன் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை என்பவற்றை உரைத்து "யான் அரும்பொருட் பரிசிலேன் அல்லேன்" சொல்வது கேள்:

"நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்"

என்றான். வேந்தன் செங்குட்டுவன்,

"மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி" னான்.

வேள்விகள் பலவும் மாடலன் கூறியவாறு செய்து, கடவுள் மங்கலமும் செய்தான்.

நிறைவுக் காதையாம் வரந்தரு காதை, அதில் மாடலன், செங்கோட்டு மலை உச்சியில் உள்ள கல்பாறை இடையில் சுனைகள் பல உண்டு; அவற்றின் இடையேயுள்ள சுனையில் புகுந்து நீராடியவர் பழம் பிறப்புணர்ச்சி அடைவர். ஆதலால் அந்நீரைக் கொணர்ந்து ஈங்குள்ள அரட்டன் செட்டியின் இரட்டைப் பிள்ளைகள் பாசண்டன் பார்ப்பனி என்பார் மூவர் மேல் தெளிக்கக்,

கேளிது மன்னா என்று அழைத்து, மாலதி என்பாளின் மாற்றாள் மகவுக்குப் பால்தர அது உண்ட குழந்தை இறக்க அவள் எப்படிப் பழிப்பாளோ எனப் பாடு கிடக்கப் பாசண்டச்சாத்தனே மகவாய் வந்து மாலதி துயர் நீக்கி, அப்பார்ப்பனியைப் பின்னே தன் கோட்டம் வரச்சொல்லி மறைந்தான். அத் தேவந்தியாம் அடித்தோழி இவள் என்றும், கோவல கண்ணகியர் தாயர் அரட்டன் செட்டியின் இரட்டைப் பிள்ளைகள் ஆயினர் என்றும் மாதரி ஆடகமாடச் சேடக் குடும்பியின் சிறுமகள் ஆயினள் என்றும் கையகத்துக் கனிபோல் காணச் செய்தனன்.

செங்குட்டுவன்,

"பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து

நித்தல் விழாவணி நிகழ்த்தச்" செய்தனன்.

மாடலன்,

"பூவும் புகையும் மேவிய விரையும்

தேவந் திகையைச் செய்கென்"றருளினன்.

கண்ணகி, 'தந்தேன் வரம்' என உருவிலி ஒலி தரச் செங்குட்டுவன் மாடலன் முதலோர் வேள்விச் சாலையுள் புகுந்தனர். இளங்கோவும் உடன் புகுந்தார். அக்கால் இளங்கோ தம் இளந்தை வரலாற்றையும், இக்கதை கேட்டோர் நடக்க வேண்டும் முறையையும் கூறி,

"மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்"

எனக் காப்பியத்தை நிறைவு செய்தார்.

எந்தத் தீர்த்த நீராட்டைப் பீடன்று என்று கண்ணகி மறுத்தாரோ, அந்த நீராட்டால் தேவந்தி முதலோரை அடையாளம் காட்டி, பார்ப்பனியாகிய அவளையே கண்ணகி கோயில் வழிபாட்டுக்கு மாடலன் வழிவகுத்தமை தான் மறையோன் பிறப்பு என்பதையும் மறைவழியே வழி என்பதையும் நல்ல ஊடகனாக இருந்து இதனைச் செய்ததையும் வேள்விச்சாலையுள் வேந்தனையும் இளங்கோவையும் புகுத்தியதையும் நோக்கின்

பழந்தமிழ் நெறிகள் பல மறை (வேத) நெறி

யாகப் புகுத்த வந்த படைப்பே மாடல மறையோன்

படைப்பு என்பது புலப்படும்.

சிலம்பில் பங்கு கொண்ட மற்றையோர் கழுவாய்க்கும் மாடல மறையோன் கொண்ட தீர்த்த மாடல் கழுவாய்க்கும் செங்குட்டுவன்

நிறையளவு பொன் பெற்றுக் கொண்டவன் ஆகிய அவன், 'பரிசில் வேண்டிக் கூறேன்' என்றதும் வேதிய அல்லது மறை வழக்காக அறியப்படுதலும் ஆய்ந்து காண்க!

காலம்

அடிகள் தமிழ்நெறிக்கதிர் ஒழிய, மதியந் தானும் தோன்றாத இடையிருள் மாலைக் காலம் போன்றதாகலின் தமிழ்நெறி மணமுறை, மறையோர் முறையில் தீவளர் வேள்வியைச் சுற்றிவரும் மங்கலவிழா நிகழ்த்தப்பட்டதும் சுட்டத்தக்கதாம்!

அரசர் முடியைப்பிடித்துக் கொண்டு, மக்கள் தன் அடியில் வீழ்ந்து கிடக்க வைக்கத் தொடங்கிய காலம் மேலும் பெருகியது இளங்கோவடிகள் காலம் என்பதன் பதிவாவணம் சிலம்பு என்பதும் எண்ணி உணரத்தக்கதாம். இந்நாள் ஊடகம் போல அந்நாள் ஊடகனாக இருந்தவன் மாடலமறையோன் என்பதைச் சுருங்கக் கூறி அமைவாம்.

"கொடைமறவோன்"

பாலெங்கே பழமெங்கே பஞ்சணைதான் எங்கெங்கே?
ஆலெங்கே அரசெங்கே அரட்டையதும் எங்கெங்கே
வேலெங்கே வில்லெங்கே வேட்டையிட என்பார்முன்
நூலெங்கே என வாழ்ந்த நுண்ணியன்சீர்க் களவுண்டோ?

மாடுகளைத் தொகுத்தார்கள் மாநிதியம் சேர்த்தற்கே
ஆடுகளைத் தொகுத்தார்கள் அருஞ்செல்வர் ஆதற்கே
வீடுகளை மிகுத்தார்கள் விருப்பமெலாம் ஈடேற்ற
ஏடுகளைத் தொகுத்தான்காண் ஈகைமிகு பாண்டியனே!

தேடிப்போய் எடுப்பாரைத் தெருத்தோறும் காண்கின்றோம்;
தேடிப்போய்க் கெடுப்பாரைத் திசைதோறும் காண்கின்றோம்
தேடிப்போய்க் கொடுப்பாரைத் திறமாகக் கண்டுளமோ?
தேடிப்போய்க் கொடுத்ததுரை தேடரிய பொருளன்றோ?

–முதுமுனைவர் இரா.இளங்குமரன்

வினைவலிது

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக் நகர்,
புதுச்சேரி - 605008
கைபேசி: 9443151044

1.0 தெலுங்கு வினையடிகள் – ஒருங்கிணைந்த ஆய்வு

1.1 நடக்கு, திறக்கு, முளைக்கு முதலான முற்றுவினைப்பகுதிகள் தெலுங்கில் முறையே நடச்உ, தெறச்உ, மொலச்உ எனத் திரிந்து நிகழ்கின்றன. இத்தகைய வினைகள் வரலாற்று நிலையில் பொதுவினைமுற்றுக்களாக நிகழ்ந்து பின்னர் இறவாக்காலப் பகுதிகளாக நிகழ்ந்து இறுதியில் முற்றுவினைப்பகுதிகளாக மாறி அமைகின்றன. தமிழைப் பொறுத்தவரை இத்தகைய முற்றுவினைப்பகுதிகள் இறவாக்காலச் சிறப்பு வினைமுற்றுக்களில் மட்டுமே நிகழ்கின்றன. ஆனால், தெலுங்கில் இந்த முற்றுவினைப்பகுதிகளின் திரிபாகிய நடச்உ, தெறச்உ, மொலச்உ முதலிய வினைகள் மூன்று காலத்திலும் நிகழும் நிலை காணப்படுகிறது. இந்த முற்றுவினைப்பகுதிகள் முதன்மை வினைப்பகுதிகளாகிய நட, திற, முளை முதலியவற்றை அடுத்து நிகழ்வனவாகும். இத்தகைய முதன்மை வினைப்பகுதிகள் வல்வினைப்பிரிவைச் சார்ந்தவையாகும்.

1.2 திராவிட மொழிக்குடும்பத்தில் தெலுங்கானது தமிழின் நேர் இளைய சகோதரியாகக் கருதப்படவேண்டிய மொழியாகும். இந்த மொழியில் நிகழும் சுகரவீற்று வினையடிகளைப் பத்ரிராஜு கிருஷ்ணமூர்த்தி (Bh.Krishnamurti.1972.மறு பதிப்பு) தெலுங்கு வினையடிகளைப் பற்றிய தனது Telugu Verbal Bases என்ற நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார். சுகரவீற்றுத் தெலுங்கு வினையடிகளைப் பற்றிய அவரது ஆய்வு முடிபுகள் குமரி மாவட்ட வட்டார இலக்கியங்களில் நிகழும் வினையமைப்புக்களின் தோற்றம் பற்றிய நமது ஆய்வின் வெளிச்சத்தில் ஏற்றுக்கொள்ளமுடியாதவையாக உள்ளன. பல சுகரவீற்றுத் தெலுங்கு வினையடிகள் வரலாற்று நிலையில் தொல்திராவிடத்தில் பொதுவினைமுற்றுக்களாக (Impersonal Finite Verbs) நிகழ்ந்து பின்னர் தெலுங்கு, தமிழ் முதலான மொழிகளில் வினைப்பகுதிகளாக மாறியவையாகும். இந்தத் தொல் திராவிட

வினைமுற்றுக்களின் வினையடிகள் பலவற்றைத் தமிழில் காணலாம். எடுத்துக்காட்டாக, நடச்உ (nadacu) '**நட**', மறச்உ (maracu) '**மற**', பறச்உ (Paṟacu) '**பற**', குடிச்உ (kuḍicu) '**குடி**' ஆகிய தெலுங்கு வினைப்பகுதிகள் தமிழில் திரிந்து வழங்கும் **நட**

DED - Dravidian Etymological Dictionary (1984)

(<*நடய்), **மற** (<*மறய்), **பற** (<*பறய்), **குடி** (<*குடிய்) ஆகிய வினைகளின் அடியாகத் தோன்றியவையாகும். இத்தகைய தெலுங்கு *வினைப்பகுதிகளின் ஈற்றில் சுகரம் நிகழ்வதால் இவற்றை நடந்து, மறந்து,* பறந்து, குடித்து ஆகிய செய்து வாய்பாட்டு வினைகளின் திரிபாகக் கொள்ளமுடியாது என்பது கிருஷ்ணமூர்த்தியின் கருத்தாகும்; உண்மையும் அதுதான்.

1.3 கிருஷ்ணமூர்த்தி மேற்படி தெலுங்கு வினைப்பகுதிகளின் *அடிநிலை வடிவங்களைச் சரியாக இனங்காணாமையால்* **நட, மற, பற, குடி** ஆகியவற்றை **நடச்உ, மறச்உ, பறச்உ, குடிச்உ** ஆகியவற்றுடன் பிறப்பியல் சார்ந்த எழுத்தியல் அடிப்படையில் அவரால் தொடர்புபடுத்த *முடியாமற்* போயிற்று. **குடிச்உ** என்பதைச் செந்தமிழ் வடிவமாகிய குடித்து (<*குடிய்த்து) என்பதன் திரிபாகப் பேச்சுத்தமிழில் நிகழும் **குடிச்சு** என்பதனுடன் தொடர்புபடுத்த வாய்ப்பில்லை. ஆகவே இந்த வினைப்பகுதியிலும் இதுபோன்ற பல சுகரவீற்று வினைப்பகுதிகளிலும் நிகழும் சுகரத்தை இறந்தகால விகுதியின் திரிபாகக் கொள்வதற்கும் வாய்ப்பில்லாமல் போகிறது. இப்படி நாம் கருதுவதற்குக் காரணம் பல சுகரவீற்றுத் தெலுங்கு வினைப்பகுதிகள் - ***ய்க்க்** - என்பதன் திரிபாகக் கொள்ளத்தக்கதாக அமைவதுதான். இதற்கான அடிப்படைச் சான்று நமக்குக் குமரித் தமிழிலிருந்து கிடைக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு சில சுகரவீற்றுத் தெலுங்கு வினைப்பகுதிகளின் தோற்றம் கீழே ஆராயப்படுகின்றது. இந்த ஆய்வில் தெலுங்கு வினைப்பகுதியையடுத்து அடைப்பில் Telugu Verbal Bases (TVB) என்ற நூலின் இறுதியில் உள்ள தெலுங்கு வினைப்பகுதிகளின் தொகுப்பில் காணப்படும் வரிசை எண்ணும், திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் (Dravidian Etymological Dictionary (DED) தொகுப்பில் காணப்படும் வரிசை எண்ணும் குறிக்கப் பெற்றுள்ளன. தெலுங்கு வினைப்பகுதிகளின் தோற்றத்திற்கு ஆதாரமாக உள்ள முதன்மை

வினைப்பகுதிகளும் (மு.வி.) அவற்றின் அடியாக அமைந்த தொல் திராவிட வடிவங்களாகிய அடிநிலை வடிவங்களும் சுட்டப்பெற்றுள்ளன. இங்கே சுட்டப்பெற்றுள்ள தொல் திராவிட வடிவங்களிலிருந்தே சுகரவீற்றுத் தெலுங்கு வினைப்பகுதிகளும் இக்காலச் செந்தமிழில் பயிலும் நிகழ்கால வினைகளில் காணப்படும் செய்கு வாய்பாட்டு வினைப்பகுதிகளும் பெறப்படுகின்றன. இந்தச் செய்கு வாய்பாட்டுத் தமிழ் வினைப்பகுதிகள் பழந்தமிழில் கால விகுதியாகிய வகர மெய்யின்முன் நிகழ்கிறது. ஏனைய காலவிகுதிகளின் முன் நிகழ்வதில்லை.

2.0 கிளைமொழிகளும் எழுத்தியல் மரபும்

2.1 தெலுங்கில் காணப்படும் **நடச்உ** என்ற வினைப்பகுதி **நடக்கு** என்ற தமிழ் வினைப்பகுதியோடு தொடர்புடையதாகும். குமரித் தமிழில் **நடக்கான், நடக்கியான்** (‘*நடக்க்யான்) **நடச்சியான்** ஆகிய வழக்குகள் காணப்படுகின்றன. இவற்றுள் ***நடக்க்யான்** என்பதில் நிகழும் யகரம் **நட** என்னும் வினையடியை ***நடய்** என மீட்டுருவாக்கத் துணை புரிகிறது. இந்த யகரம் ***நடக்க்யான்** என்ற நிகழ்கால வினையில் இடம்பெயர்ந்து கால இடைநிலையை அடுத்து நிகழ்கின்றது. **நடச்சியான்** என்பது ***நடக்க்யான்** என்பதன் திரிபாகும். தெலுங்கில் நிகழும் **நடச்உ** என்ற வினைப்பகுதியின் அடிநிலை வடிவம் ***நடய்க்கு** என்பதாகும். இதனின்றுதான் யகரம் கெட்டு **நடக்கு** என்ற தமிழ் வினைப்பகுதி தோற்றம் கொள்கிறது. **-க்க்-** என்ற மெய்ம்மயக்கம் குமரித் தமிழில் - **ச்ச்** எனத் திரிவதை முதன்முதலில் கண்டறிந்தவர் ராபர்ட் கால்டுவெல் (1961:506) ஆவார். ஆயினும் இந்தத் திரிபு எத்தகைய சூழலில் நிகழ்கிறது என்பதை அவர் குறிப்பிடவில்லை. யகரவீற்று வினையடிகளைத் தொடர்ந்து நிகழும் **-க்க்-** என்பதே இந்தச் சூழலாகும். இதன் அடிப்படையில் **நட, திற** முதலான அகரவீற்று வினையடிகள் ***நடய், *திறய்** எனவும் **குடி** என்ற இகரவீற்று வினையடி ***குடிய்** எனவும் மீட்டுருவாக்கம் செய்யப்படும். ஐகாரவீற்று வினையடிகள் **அய்** ஈற்றினவாகக் கொள்ளப்படும். இவற்றில் நிகழும் யகரவீறு **-க்க்-** என்பதை அடுத்துக் குமரித் தமிழில் இடம் பெயர்கிறது என்பதையும் கால்டுவெல் குறிப்பிடவில்லை. ஆயினும் தமிழில் நிகழும் **வைக்கு** என்ற வினைப்பகுதி எடுத்துக்காட்டாகத் தெலுங்கில் **வைச்உ** என நிகழும் எனக் கால்டுவெல் குறிப்பிடுவதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

2.2 ஒரு கிளைமொழியில் நிகழும் எழுத்தியல் மாற்றங்கள் இன்னொரு கிளைமொழியில் அப்படியே நிகழவேண்டும் என்ற நியதி இல்லை. தொல்திராவிடக் கிளைமொழிகள் பின்னர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு எனத் தனிமொழிகளாக நிகழலாயின. இத்தகைய சூழலில் குமரிக் கிளைமொழிகளில் நிகழும் நிகழ்கால வினைகளில் காணப்படும் எழுத்தியல் மாற்றங்கள் தெலுங்கிலும் நிகழலாம். ஆனால் வினையடியில் காணப்படும் ஈற்று யகர மெய் தெலுங்கில் இடம் பெயராமலேயே அதனையடுத்து நிகழும் இரட்டித்த ககர மெய்களைச் சகர மெய்களாகத் திரியச் செய்கின்றது. எடுத்துக்காட்டாக ***நடய்க்கு** என்பதில் நிகழும் யகரம் இடம் பெயராமலேயே அதனையடுத்து நிகழும் ககர மெய்களைச் சகர மெய்களாகத் திரியச் செய்யும். இதனைத் தொடர்ந்து முதன்மை வினையடியின் ஈற்றில் நிகழும் யகரம் கெடுகிறது. தமிழிலும் இந்த யகரக்கேடு **நடக்கு, குடிக்கு** முதலான முற்று வினைப்பகுதிகளில் நிகழ்கின்றது. பின்னர் இரட்டித்த சகர மெய்கள் தெலுங்கில் ஒற்றைச் சகரமாக ஒடுங்கி நிற்கிறது. ஆனால் **அலஞ்ச்உ** (‹*அலய்ங்க்உ), **கலஞ்ச்உ** (‹*கலய்ங்க்உ) முதலான தெலுங்கு வினைப்பகுதிகளில் சகரத்தின்முன் நிகழும் இன மெல்லொற்று கெடுவதில்லை. இந்தப் பின்னணியில்தான் **நடச்உ, தெறச்உ, குடுச்உ** (‹*குடிச்உ), **அடஞ்ச்உ, கரஞ்ச்உ** முதலான தெலுங்கு வினைப்பகுதிகள் பின்வருமாறு பெறப்படும்.

1 (1) நடச்உ (nadacu) (TVB.696/DED.2957) ‘நட’

(2) முதன்மை வினையடி (மு.வி.) : *நடய்.தமிழ்.நட/நடக்கு.

தொல்திராவிட வடிவம் (தொ.தி.): *நடய்க்கு

(3)*நடய்க்கு ›நடக்க்யு ›நடச்ச்யு ›நடச்சு ›நடச்உ ›நடுச்உ (தெலுங்கு)

2 (1) கடச்உ (kadacu) (TVB.236/DED.929) ‘கட’

(2) மு.வி.: தமிழ். கட/கடக்கு. தொ.தி.: *கடய்க்கு

(3) *கடய்க்கு›கடக்க்யு ›கடச்ச்யு ›கடச்சு ›கடச்உ (தெலுங்கு)

3 (1) காச்உ (kacu) (TVB.271/DED/.1220) ‘காய்’

(2)மு.வி.*காய்.தமிழ்.காய்/காய்க்கு. தொ.தி. *காய்க்கு

(3) *காய்க்கு ›காக்க்யு ›காச்ச்யு ›காச்சு ›காச்உ (தெலுங்கு)

4 (1) குடுச்உ (Kuducu) (TVB.286/DED.1378) 'குடி/உண்'

(2) மு.வி. *குடிய்.தமிழ் குடி/குடிக்கு. தொ.தி. *குடிய்க்கு

(3) 'குடிய்க்கு ›குடிக்க்யு ›குடிச்ச்யு ›குடிச்சு ›குடிச்உ ›குடுச்உ (தெலுங்கு)

5 (1) துடுச்உ (tuducu) (TVB.578/DED.2703) 'துடை'

(2) மு.வி. *துடய்.தமிழ்.துடய்/துடய்க்கு.தொ.தி.*துடய்க்கு

(3)*துடய்க்கு ›துடக்க்யு ›துடச்ச்யு ›துடச்சு ›துடச்உ ›துடுச்உ (தெலுங்கு)

6 (1) தெறச்உ (teṟacu) (TVB.606/DED.2667) 'திற'

(2) மு.வி. *திறய்/*தெறய்.தமிழ்.திற/திறக்கு. தொ.தி. *திறய்க்கு/ *தெறய்க்கு

(3)*தெறய்க்கு ›தெறக்க்யு ›தெறச்ச்யு ›தெறச்சு ›தெறச்உ (தெலுங்கு)

7 (1) பறச்உ (paṟacu) (TVB.802/DED.3311) 'பற'

(2) மு.வி. *பறய்.தமிழ்.பற/பறக்கு. தொ.தி. *பறய்க்கு

(3) *பறய்க்கு ›பறக்க்யு ›பறச்ச்யு ›பறச்சு ›பறச்உ (தெலுங்கு)

8 (1) மறச்உ (maṟacu) (TVB.945/DED.3897) 'மற'

(2) மு.வி. *மறய்.தமிழ்.மற/மறக்கு. தொ.தி. *மறய்க்கு

(3) *மறய்க்கு ›மறக்க்யு ›மறச்ச்யு ›மறச்சு ›மறச்உ (தெலுங்கு)

9 (1) மொலச்உ (molacu (TVB.1057/DED.4100) 'முளை'

(2) மு.வி.*மொளய்.தமிழ்.முளைய்/முளைய்க்கு. தொ.தி.*மொளய்க்கு

(3) *மொளய்க்கு ›மொளக்க்யு ›மொளச்ச்யு ›மொலச்சு ›மொலச்உ (தெலுங்கு)

10 (1) வடுச்உ (Vaducu) (TVB.1127/DED.4269) 'வடி'

(2) மு.வி. *வடிய்.தமிழ்.வடி/வடிக்கு.தொ.தி.*வடிய்க்கு

(3)*வடிய்க்கு ›வடிக்க்யு ›வடிச்ச்யு ›வடிச்சு ›வடிச்உ ›வடுச்உ (தெலுங்கு)

தெலுங்கு வினையடிகளில் சகரத்தின்முன் மெல்லொற்று நிகழ்ந்தால் தொல் திராவிட வடிவங்களில் அந்த மெல்லொற்று குறிக்கப்படும்.

11 (1) அடஞ்ச்உ (adacu) (TVB.6/DED.56a) 'அடக்கு'

(2) மு.வி. *அடய். தமிழ். *அடக்கு.தொ.தி. *அடய்ங்க்உ

(3) *அடய்ங்க்உ ›அடய்ஞ்ச்உ ›அடஞ்ச்உ (adacu) (தெலுங்கு)

தமிழ் வடிவமாகிய **அடக்கு** என்பது ***அடய்ங்க்உ** என்பதிலிருந்து பின்வருமாறு வருவிக்கப்படும்.

(4) *அடய்ங்க்உ ›அடங்க்உ ›அடக்கு (தமிழ்)

12 (1) அலஞ்ச்உ (alacu) (TVB.41/DED.200) 'அலை'

(2) மு.வி. *அலய்.தமிழ்.அலய்/அலய்க்கு.தொ.தி.*அலய்ங்க்உ

(3)*அலய்ங்க்உ ›அலய்ஞ்ச்உ ›அலஞ்ச்உ (alacu) (தெலுங்கு)

(4) *அலய்ங்க்உ ›அலய்க்கு/அலைக்கு (தமிழ்)

13 (1) கரஞ்ச்உ (Karacu) (TVB.256/DED.1086) 'கரை'

(2) மு.வி. *கரய்.தமிழ்.கரய்/கரய்க்கு.தொ.தி. *கரய்ங்க்உ

(3)*கரய்ங்க்உ ›கரய்ஞ்ச்உ ›கரஞ்ச்உ(karacu) (தெலுங்கு)

(4) *கரய்ங்க்உ ›கரய்க்கு ›கரைக்கு (தமிழ்)

14 (1) கலஞ்ச்உ (kalacu) (TVB.260/DED.nil) 'கலக்கு'

(2) மு.வி. *கலய்.தமிழ்.கல/கலக்கு. தொ.தி. *கலய்ங்க்உ

(3) *கலய்ங்க்உ ›கலய்ஞ்ச்உ ›கலஞ்ச்உ (kalacu) (தெலுங்கு)

(4) *கலய்ங்க்உ ›கலய்க்கு ›கலக்கு (தமிழ்)

15 (1) தூஞ்ச்உ (tuncu) (TVB.588/DED.2777(a))'தூக்கு'

(2) மு.வி. *தூய்.தமிழ்.தூக்கு.தொ.தி. *தூய்ங்க்உ

(3) *தூய்ங்க்உ ›தூய்ஞ்ச்உ ›தூஞ்ச்உ (tuncu) (தெலுங்கு)

(4) *தூய்ங்க்உ ›தூய்க்கு ›தூக்கு (தமிழ்)

மேலே நிகழ்த்திய தெலுங்கு வினைப்பகுதிகள் தொடர்பான ஆய்வில் தமிழ் வினைப்பகுதிகளில் சகரமெய்யின் நிகழ்ச்சி காணப்படவில்லை. **காய்ச்சு** என்ற வினைப்பகுதியில் சகரமெய்யின் நிகழ்ச்சி காணப்படுகிறது. இதன் உறவுச்சொல்லாக (Cognate) **காஞ்ச்உ** என்ற

வினைப்பகுதி காணப்படுகிறது. **காய்ச்சு, காஞ்ச்உ** இரண்டின் தோற்றம் கீழே விளக்கப்படுகிறது.

16 (1) காஞ்ச்உ (kancu)(TVB.270/DED.1219) 'காய்ச்சு'

(2) மு.வி. *காய்.தமிழ்.காய்ச்சு.தொ.தி. *காய்ங்க்உ

(3) *காய்ங்க்உ ›காய்ஞ்ச்உ ›காஞ்ச்உ (தெலுங்கு)

(4) *காய்ங்க்உ ›காய்க்கு ›காய்ச்சு (தமிழ்)

2.3 தெலுங்கில் நிகழும் **அலஞ்ச்உ, கரஞ்ச்உ, கலஞ்ச்உ, மதிஞ்ச்உ, குறிஞ்ச்உ** ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள். ***அலய்ங்க்உ, *கரய்ங்க்உ, *மதிய்ங்க்உ, *குறிய்ங்க்உ** என்பனவாகும். இவற்றில் நிகழும் **-ங்க்-** என்ற அடியண்ண மெய்ம்மயக்கம் **-ஞ்ச்-** என்ற இடையண்ண மெய்ம்மயக்கமாகத் திரிவதற்குக் காரணம் **-ங்க்-** என்பதன் முன் நிகழும் யகர மெய்யாகும். தமிழில் யகர மெய்யையடுத்து **-த்த்-**, **-ந்த்-**ஆகிய மெய்ம்மயக்கங்களும் நிகழ்கின்றன. தெலுங்கிலும் தமிழிலும் யகரத்தையடுத்து நிகழும் மேற்படி மெய்ம்மயக்கங்கள் இடையண்ண மெய்ம்மயக்கங்களாகத் திரிகின்றன. யகர மெய்க்கு நெருங்கிய உறவுள்ள மெய்களில் சகரமும் ஞகரமும் ஆகும். அதனால்தான் **-ய்ங்க்-** என்ற மெய்ம்மயக்கம் தெலுங்கில் **-ய்ஞ்ச்-** எனத் திரிந்து பின்னர் யகர மெய்கெடுகிறது. இந்த எழுத்தியல் மாற்றங்களின் விளைவாகத் தெலுங்கில் **அலஞ்ச்உ, கரஞ்ச்உ** முதலான வினைப்பகுதிகள் தோன்றி அமைகின்றன. தமிழில் **-ய்த்த்-**, **-ய்ந்த்-** ஆகிய மெய்ம்மயக்கங்கள் **-ய்ச்ச்-**, **-ய்ஞ்ச்-** எனத் திரிந்து பின்னர் யகரத்தை இழந்து **-ச்ச்-**, **-ஞ்ச்-** எனப் பேச்சு வழக்கில் நிகழ்கின்றன. எ-டு. தேய்த்து›தேய்ச்சு›தேச்சு, தேய்ந்து›தேய்ஞ்சு›தேஞ்சு. குமரி மாவட்டக் கிளைமொழியில் **-ய்க்க்-**என்ற மெய்ம்மயக்கம் **-க்க்ய்-** எனப் பிறழ்ந்து **-ச்ச்ய்-** எனத் திரிகிறது. பின்னர் யகரத்தின்முன் ஒலிப்பு வசதிக்காக **-க்க்-**, **-ச்ச்-** ஆகியவற்றின்முன் இகரம் இடம்பெறுகிறது. இங்கும் **-க்க்ய்-** என்ற பிறழ்மெய்ம்மயக்கத்தில் யகரம் **-க்க்-** என்பதையடுத்து நிகழ்கின்றது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இத்தகைய நிகழ்ச்சி குமரிக் கிளைமொழியில் மட்டுமே காணப்படுகிறது. எ-டு. ***குடிய்க்கான்› குடிக்கான்** (நாஞ்சில் வழக்கு), ***குடிய்க்கான்› குடிக்க்யான்› குடிக்யான்** (குமரிக்கிளைமொழி-1), *குடிய்க்கான்›குடிக்க்யான்› குடிக்கியான் (குமரிக்கிளைமொழி-2), **நடக்கிய வழி** (=நடக்கவழி, 'நடக்கிறவழி') (குமாரசெல்வா 2012:58) என்ற வழக்கும் இத்தகையதாகும்.

***குடிய்க்கான்› குடிக்க்யான்› குடிச்ச்யான்› குடிச்சியான்** (குமரிக்கிளை மொழி-3). இந்த எடுத்துக்காட்டுக்களில் நிகழும் வினைமுற்றுக்கள் அனைத்தும் நிகழ்காலத்தினவாகும். **குடிச்சியான்** என்ற வினையின் தோற்றத்தின் விளைவாக **குடிச்சு** என்ற புதிய வினைப்பகுதி குமரித் தமிழில் தோற்றம் கொண்டது. எ-டு. **குடிச்ச** (=குடிக்கெ) 'குடிக்கிறாய்' (பெர்லின், சி.குறும்பனை,2006:47), குடுச்சுத (=குடிக்குத) 'குடிக்கிற' (மேற்படி:24), **படிச்சுதேன்** (=படிக்குதேன்) 'படிக்கிறேன்' (மேற்படி.2008:76).

3.0 கோட்பாட்டு நிலையில் சில வினாக்கள்

3.1 தெலுங்கு வினைப்பகுதிகளைப்பற்றிய மேற்கண்ட ஆய்வானது கோட்பாட்டு நிலையில் இரண்டு வினாக்களை எழுப்புகின்றது. ஒன்று, சுகரவீற்றுத் தெலுங்கு வினையடிகளுக்கும் செய்கு வாய்பாட்டினவாகிய தமிழ் வினையடிகளுக்கும் அடிநிலை வடிவங்களாகக் குறிக்கப்பெற்றுள்ள தொல் திராவிட வினையடிகளா அல்லது வினைமுற்றுக்களா? அவை வினைப்பகுதிகளாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவை இன்னொரு வகை வினையடியாகத் தோன்றிய வினைவடிவங்களாகும். நாஞ்சில் தமிழை முதன்மைப்படுத்தி நாஞ்சில் நாடனால் எழுதப்பட்டுள்ள இலக்கியப் படைப்புக்களில் செய்கு வாய்பாட்டு வினைகள் ஒன்றன்பால் நிகழ் வினைகளாக நிகழும் போக்கினைக் காணமுடிகிறது. இந்த வினைகள் வேற்றுமை உருபேற்கும் பெற்றியையும் தோப்பில் முகம்மது மீரானின் வட்டார மொழியில் எழுதப்பெற்றுள்ள இலக்கியப் படைப்புக்கள் தெளிவுபடுத்துகின்றன. எ.டு.**தருவுக்கு** (1991:156) (‹*தருகுக்கு), **வருக்கு** (1991:210) (‹*வருகுக்கு), **எடுக்குக்கு** (1991:12), **நடக்குக்கு** (1991:15). இதனைக் கருதுகையில் குமரித் தமிழில் பயிலும் செய்கு வாய்பாட்டு ஒன்றன்பால் நிகழ்வினைகள் வரலாற்று நிலையில் அல்லது தொல் திராவிடத்தில் பொதுவினைமுற்றுக்களாக (Impersonal Finite Verbs) நிகழ்ந்திருக்கலாம் என்று துணியத் தோன்றுகிறது. இந்தப் பொதுவினைமுற்றுக்களில் ஈற்று விகுதியானது முற்றுப்பொருண்மை, காலப்பொருண்மை இரண்டையும் ஒருங்கே உணர்த்தியதாதல் வேண்டும். இந்தக் கருதுகோள் மேலே நாம் நிகழ்த்திய ஆய்வில் குறிக்கப்பெற்றுள்ள தொல் திராவிட அடிநிலை வடிவங்களை நிகழ்வெதிர்வுப் (Non Past) பொதுவினைமுற்றுக்களாக வழங்கியிருக்கலாம் என்று கொள்ள வகை செய்கிறது.

3.2 தெலுங்கு வினைப்பகுதிகள் தொடர்பாக மேலே நிகழ்த்திய ஆய்வில் எழும் இரண்டாவது வினா: ஆய்வில் குறிக்கப்பெற்றுள்ள தொல் திராவிட வடிவங்களில் **-க்க்-**, **-ங்க்-** (›**-ஞ்ச்-**) ஆகிய மெய்ம் மயக்கங்கள் காணப்படுகின்றன. இது ஏன்? இதற்குக் காரணம் தெலுங்கிலும் தமிழிலும் உள்ள புறநிலை வடிவங்கள் ஆய்வைக் கட்டுப்படுத்துவதுதான். புறநிறைவு (External Adequacy) அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எந்த ஆய்விலும் இத்தகைய சிக்கல் எழுவது இயல்புதான். ஆயினும் இத்தகைய ஆய்வில் சில உண்மைகளை உய்த்துணர முடியும். மேலே நாம் குறிப்பிட்டுள்ள எல்லாத் தொல் திராவிட அடிநிலை வடிவங்களும் அமைப்பியல் மரபுக்கு மாறுபடாத வகையில் மறுபரிசீலனைக்குரியவை என்பதை நாம் உணர்கிறோம். குமாரசாமி ராஜாவின் NPP கோட்பாட்டை ஒதுக்கிவைத்துவிட்டு எடுத்துக்காட்டாக **நடச்உ**, **கரஞ்ச்உ** ஆகிய தெலுங்கு வினைப்பகுதிகளின் அடிநிலை வடிவங்களை முறையே ***நடய்ங்க்உ**, ***கரய்ங்க்உ** என்று அமைக்க முடியும். இந்த அடிநிலை வடிவங்களைக் கொண்ட ஆய்வு பின்வருமாறு இருக்கும்.

17 (1) நடச்உ (naḍacu) (TVB.696/DED.2957) ‘நட’

(2) மு.வி. *நடய்.தமிழ்.நட/நடக்கு. தொ.தி. *நடய்ங்க்உ

(3) *நடய்ங்க்உ ›நடங்க்யு ›நடஞ்ச்யு ›நடச்சு ›நடச்உ (›நடுச்உ)

(4) *நடய்ங்க்உ ›நடய்க்கு ›நடக்கு (தமிழ்)

18 (1) கரஞ்ச்உ (karācu) (TVB.256/DED.1086) ‘கரை/கரைத்தல்’

(2) மு.வி. *கரய்.தமிழ்.கரய்/கரய்க்கு.தொ.தி. *கரய்ங்க்உ

(3) *கரய்ங்க்உ ›கரங்க்யு ›கரஞ்ச்யு ›கரஞ்ச்உ (karācu)

(4) *கரய்ங்க்உ ›கரய்க்கு/கரைக்கு (தமிழ்)

இந்த ஆய்வில் ஈற்றயலதாகிய மெல்லொற்று இனவல்லொற்றாகத் திரிகிறது (-ங்க்- ›-க்க்-). இதன்மூலம் **நடக்கு**, **கரைக்கு** ஆகியவற்றுள் **-க்கு-** என்பதில் உள்ள முதல் வல்லொற்றானது மெல்லொற்றின் திரிபு என்ற உண்மை பெறப்படுகிறது. மாறாக, அடிநிலை வடிவங்களை ***நடய்க்கு**, ***கரய்ங்க்உ** என்று அமைக்கும்போது பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஈற்றில் கூடுதலாக உள்ள ககரமெய்யின் வருகையை விளக்கமுடியவில்லை. மீட்டுருவாக்கம் செய்யும்போது எங்காவது ஒரு கட்டத்தில் இதை நாம் விளக்கியாக வேண்டும்.

இரண்டாவது சிக்கல், ***கரய்ங்க்உ** என்பதில் உள்ள மெல்லொற்று திரிந்து கெடுகிறதா, திரியாமலே கெடுகிறதா? இந்த வினாக்களுக்கெல்லாம் நம்மால் தெளிவான, ஏற்புடைய விடையளிக்கமுடியவில்லை. அடிநிலை வடிவங்களை ***நடய்ங்க்உ**, ***கரய்ங்க்உ** என்று அமைத்துக்கொள்ளும் போது இத்தகைய சிக்கல் எதுமில்லை. ஒரு மெல்லொற்று வல்லொற்றின் முன் வல்லொற்றாகத் திரியவேண்டுமானால் திரிபுக்கு காரணமாகிய வல்லொற்று நிலையொலித் தன்மையினதாக (Voicelessness) இருக்க வேண்டும். வல்லொற்றின் இந்தத் தன்மை பல்வேறு தாக்கங்களால் மாறுபடலாம்; அல்லது பாதுகாக்கப்படலாம். இதுபற்றி நாம் இங்கே ஏதும் பேசுவதற்கில்லை. ஆனால் ஒன்றை இங்கே குறிப்பிட்டாகவேண்டும். ***கரய்ங்க்உ** என்பது **கரயும்** என்ற செய்ம் (<*செயும்) வாய்பாட்டு வினையின் அடியாகத் தோன்றியதாகும். இது **செய்கு, செய்பு** வாய்பாட்டுக் காலப் பகுதிகளுக்கும் **குடிக்கு, மறைக்கு தேய்க்கு, நடக்கு, பறிப்பு, மறைப்பு, தேய்ப்பு, கிளப்பு,** முதலான முற்று வினைப்பகுதிகளுக்கும் தெலுங்கில் நிகழும் **நடச்உ, தெறச்உ, குடிச்உ, கடச்உ** முதலான முற்றுவினைப் பகுதிகளுக்கும் பொருந்தும். இவையனைத்தும் வல்வினை சார்ந்த எடுத்துக்காட்டுக்களாக அமைய வேண்டும்.

குடி, நட ஆகிய வினைப்பகுதிகளுக்கு இணையான தெலுங்கு வினைப்பகுதிகள் **குடிச்உ, நடச்உ** என்பவையாகும். **குடி, நட** ஆகியவை முதன்மை வினைப்பகுதிகளாகும். **குடிச்உ, நடச்உ** ஆகியவை **குடி, நட** ஆகிய முதன்மை வினைப்பகுதிகளின் அடியாகத் தோன்றிய முற்றுவினைப் பகுதிகளாகும். முற்றுவினைப் பகுதிகள் என்பவை பொதுவினை முற்றுக்களாக நிகழ்ந்து பின்னர் வினைப்பகுதிகளாக மாறிவையாகும். **குடி, நட** ஆகிய முதன்மை வினைப்பகுதிகளின் அடியாகத் தோன்றி நிகழும் முற்றுவினைப் பகுதிகள் தமிழில் **குடிக்கு, நடக்கு** என்பவையாகும். **குடிக்க, குடிக்கும், குடிக்குதும்; நடக்க, நடக்கும், நடக்குதும்** ஆகிய வினையமைப்புகள் **குடிக்கு, நடக்கு** ஆகிய முற்றுவினைப் பகுதிகளின் அடியாகத் தோன்றி நிகழ்பவையாகும். பழந்தமிழில் முற்றுவினைப்பகுதிகளின் அடியாகத் தோன்றி நிகழும் வினைமுற்றுக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் கருத்திற்கொள்ளத்தக்கனவாகும்.

வினைமுற்று	முற்றுவினைப் பகுதி	முதன்மைவினைப்பகுதி
அகழ்க்குவன் (பட்.271)	அகழ்க்கு	அகழ்
அளிக்குவை (அகம்.192.9)	அளிக்கு	அளி

உயர்க்குவை (மது.131)	உயர்க்கு	உயர்
கேட்குவன் (புறம்.225.9)	கேட்கு	கேள்
கொடுக்குவர் (புறம்.182.5)	கொடுக்கு	கொடு
தூர்க்குவன் (பட்.271)	தூர்க்கு	தூர்
நிற்குவிர் (பொரு.150)	நிற்கு	நில்
நிறுக்குவன் (அகம்.28.13)	நிறுக்கு	நிறு
வீழ்க்குவன் (பட்.272)	வீழ்க்கு	வீழ்

தெலுங்கில் நிகழும் **குடிச்உ**, **நடச்உ** போன்ற வினைப்பகுதிகளை அவற்றுக்கு இணையாகத் தமிழில் நிகழும் குடிக்கு, நடக்கு போன்ற முற்றுவினைப்பகுதிகளுடன் ஒருங்கிணைத்து ஆராய வேண்டுமே தவிர, குடி, நட போன்ற முதன்மை வினைப்பகுதிகளுடன் ஒருங்கிணைத்து ஆராயக்கூடாது; அவ்வாறு ஆராயவும் முடியாது. பத்ரிராஜூ கிருஷ்ணமூர்த்தி குடிச்உ, நடச்உ போன்ற வினைகளை குடி, நட போன்ற வினைப்பகுதிகளுடன் ஒருங்கிணைந்த ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்று கண்டறிந்து குடிச்சு, நடச்சு போன்ற சுகர வீற்று வினைகள் தெலுங்கில் நிகழ்ந்த புதுமையாக்கமாக அவற்றைக் கருதினார். உண்மையில் அவை தெலுங்கில் நிகழ்ந்த புதுமையாக்கமெனில் தமிழில் நிகழும் குடிக்கு, நடக்கு போன்றவற்றையும் புதுமையாக்கமாகவே கருத வேண்டும்.

குடிக்கு, நடக்கு போன்ற தமிழ் முற்றுவினைப் பகுதிகளையும் தெலுங்கில் நிகழும் குடிச்உ, நடச்உ போன்ற வினைப்பகுதிகளையும் குறிப்பிட்ட அடிநிலை வடிவங்களிலிருந்து பெறவேண்டும். குடிச்உ, நடச்உ போன்ற வினைப்பகுதிகளில் ஈற்றயல் ஒலியனாகச் சகரம் நிகழ்வதால் குடி, நட போன்ற வினைப்பகுதிகள் *குடிய், *நடய் என மீட்டுருவாக்கப்பட வேண்டும். முதன்மை வினைப்பகுதிகள் யகரவீற்றினவாக இருந்தால்தான் தெலுங்கு வினைப்பகுதிகளில் நிகழும் ஈற்றயல் சகரம் எதன் திரிபு என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும். இதனைக் கருத்தில்கொண்டு குடிக்கு/குடிச்உ, நடக்கு/நடச்உ ஆகியவற்றின் அடிநிலை வடிவங்களை முறையே *குடிய்க்கு, *நடய்க்கு என மீட்டுருவாக்க வேண்டும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

உளவியல் பார்வையில் குறுந்தொகைப் பாடல்கள்

பேரா **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

சென்ற இதழின் தொடர்ச்சி

தலைவன் பிரிந்து செல்லுதற்குத் தனது துடுக்குத்தனமே காரணம் ஆகிவிட்டதை எண்ணி வருந்தும் தலைவியை நன்னாகையார் பாடலில் காணலாம்.

சேறும் சேறும் என்றலின் பண்டைத்தம்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
மன்னிக் கழிக என்றேனே அன்னோ
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்று என்இடைமுலை நிறைந்தே.

(குறுந்தொகை 325)

"யான் பிரிந்து சென்றுவிடுவேன், பிரிந்து சென்றுவிடுவேன்" என்று அவன் பலமுறை சொல்லிக்கொண்டே இருந்தனன். அதனால் அவன் முன்பு கூறிய பொய்ச்செலவாக நினைத்து, என்பக்கத்தினின்று நீங்கிச் செல்க என்று சொன்னேன். ஐயோ! அவன் சென்றுவிட்டான். எமக்குப் பற்றுக்கோடாகிய தந்தை இப்பொழுது எங்கு இருக்கின்றானோ? அவனது பிரிவால் நான் கண்ணீர் விட்டு அழுத கண்ணீர் என் நகில்களின் இடையிலுள்ள இடத்தை நிரப்பி, அது கரிய கால்களை உடைய வெள்ளிய நாரை உணவுண்ணும் பெரியகுளம்போல் தோன்றுகின்றது.

ஒவ்வொரு நாளும் தலைவன் பலமுறை 'செல்வேன், செல்வேன்' என்று அச்சுறுத்திக் கொண்டிருந்தான்; ஆனால் செல்லவில்லை. ஒருநாள் அவன் அவ்வாறு பன்முறை சொல்லியபோது எரிச்சலடைந்த தலைவி வெறுப்பும் சினமும் கொண்டு, அவன் செல்லமாட்டான் என்ற எண்ணத்தில் "என் அருகிலிருந்து சென்று விடுக" என்று துடுக்காகச் சொன்னாள். கண்ணோட்டமில்லாமல், கருத்தில்லாமல் அவள் சொன்னதைச் சாக்காகக்கொண்டு, அன்று சென்றுவிட்டான். "எனக்கு

ஆதரவாக இருந்த என் தந்தை போன்றவன் பிரிந்து போய்விட்டானே, அவன் இப்பொழுது எங்கு உள்ளானோ?" என்று அவள் நாளும் அழுது புலம்புகின்றாள். அவளது கண்ணீர் நெஞ்சை நிறைக்கின்றது. நெஞ்சு நாரை உணவு தேடும் குளம்போலாகிவிட்டதே என்று அரற்றுகின்றாள்.

அவளது இயல்பறிந்திருந்த தலைவன், "சென்றுவிடுவேன், சென்றுவிடுவேன்" என்று சொல்லிச் செல்லாதிருந்தது அவள் எப்போதாவது எரிச்சலால் 'செல்' என்று சொல்வாள் என்பதை எதிர் பார்த்திருந்ததால் ஆகலாம்! அவ்வாறு சொன்னாளானால் பழியை அவள் மீது போட்டுவிடுதல் எளிதாகும் என்று கருதியிருப்பான்போலும்! பிரிந்து செல்ல முடிவுசெய்துவிட்ட தலைவன் இத்தகைய உத்தியைக் கையாள்வதில் தோல்வி அடைந்திருந்தாலும் பிரிந்திருப்பான் என்பதை எண்ணிப் பார்க்காத தலைவி பழியைத் தன் மீது சுமத்திக் கண்ணீர் விடுகின்றாள்! சினத்தில் அவள் 'என் அருகிலிருந்து நீங்கு' என்றுதான் சொல்கிறாள். 'பிரிந்துவிடுவேன், பிரிந்துவிடுவேன்' என்று அவன் மீண்டும் மீண்டும் சொல்வதைக் கேட்க விரும்பாதவளாய் அவள் அவ்வாறு சொல்லி யிருக்கலாம். அவனோ அதுவே தலைக்கீடாகக் கிளம்பிவிடுகிறான்!

தலைவி கணவனைத் தந்தையென்றே குறிப்பிடுகின்றாள். தந்தையென்றது முறை குறித்தன்று, உறவின் மிகுதியைக் குறித்தே என்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடியும். 'அவன் இப்பொழுது எங்குள்ளானோ?' என்று அவள் ஏங்கி அழுவதும் அவள்பால் நமது இரக்கத்தை மிகுவிக்கும்.

நாரை இறைதேடும் குளம் என்னும் உவமையும் உளவியல் பொருத்தம் உடையதே. தனது நலத்தை உண்டு இரக்கமின்றிச் சென்ற தலைவனைக் குளத்தில் மீனைத்தேடித்திரியும் நாரையாகவே அவள் பார்க்கின்றாள்.

இத்தலைவியைப்போல் பிரிவால்வாடும் பெண்ணொருத்தியின் நிலையை இவ்வுவமை கொண்டே சித்திரிப்பார் திருத்தக்கதேவர்.

உருகி வாடியென் னுற்றது கொல்லெனக்
கருகி வாடிய காமரு கோதைதன்
இருக ணீரும் இடைமுலை பாய்ந்துகக்
குருகு பாய்தடமாக அழுங்கொலோ. *(சீவகசிந்தாமணி 1629)*

தலைமகன் பரத்தையரிடமிருந்து பிரிந்து வந்த காலத்தில் அவனைக்கடிந்து கூறிய தோழிக்கு அவன் கேட்குமாறு தலைவி கூறியதாக ஒரு பாடல் சாத்தனால் பாடப்பட்டுள்ளது.

அடும்புஅவிழ் அணிமலர் சிதைஇய மீன்அருந்தித்
தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்
தண்ணந் துறைவன் தொடுத்து நந்நலம்
கொள்வாம் என்றி தோழி கொள்வாம்
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவெனக் கூறலின்
இன்னா தோறம் இன்னுயிர் இழவே. *(குறுந்தொகை 349)*

தோழியே, அடும்பின் கொடியில் மலர்ந்த அழகிய மலரைச்சிதைத்து மீனை உண்ணுகின்ற வளைந்த காலை உடைய நாரை தங்கியிருக்கின்ற மணல்மேட்டைக் கொண்ட தண்ணிய துறையை உடையவன் தலைவன். அவனை வளைத்து நாம் இழந்த பெண்மை நலத்தைப் பெறுவோமென்று கூறுகின்றாய். அவ்வாறே கொள்வோம். ஆயினும் தாம் உற்ற வறுமைக்கொடுமைக்கு அஞ்சி, இரந்தோர் விரும்பிக் கேட்டதைக் கொடுத்துவிட்டுப் பிறகு அவ்வாறு கொடுத்தவற்றைத் திரும்பித்தருக என்று சொல்லுதலைக் காட்டிலும் நமது இனிய உயிரை இழத்தல் இன்னாதது அன்று.

பரத்தையரிடம் சென்று திரும்பிய தலைவனைத் தோழி கடுமையாகச் சாடுகிறாள். அவனால் இழந்த தலைவியின் நலத்தைத் திரும்பித்தாவென்று அவனிடம் கேட்கவேண்டுமென்று தலைவியிடம் சொல்கிறாள். அது நடைமுறைக்கு இயலாதது என்பதை இருவரும் அறிவர். ஆயினும் தலைவியின் உள்ள வேதனையை அறிந்து அவளுக்கு ஆறுதல் அளித்தலை எண்ணி இவ்வாறு பேசுகிறாள். தலைவியோ இது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றோ, நகைப்புக்கு உரியது என்றோ விடை கூறாமல் அது தனக்கு இழிவு செய்வதாகும் என்று கூறுகிறாள். இரப்போர் விரும்பிப்பெற்றதைக் கொடுத்துவிட்டு மீண்டும் அதனைக்கேட்டல் பண்புடைமை ஆகாது. அதனினும் உயிரைவிட்டு விடுதலே நன்றென்பாள். தலைவியின் மாண்பையும் அவள் உள்ளப்போராட்டத்தையும் வெளிப்படுத்தும் கூற்று இது. தலைவன் எத்தகைய கொடிய செயலைச் செய்துள்ளான் என்பதையும் அவள் உணராதவள் அல்லள். அவனது நாட்டிலுள்ள நாரை அழகிய மலரைச் சிதைத்து மீனை அருந்தும் தன்மையது. அவனோ காதலித்து மணந்த மனைவியைத் துறந்து, பரத்தையரிடம் இன்பம் கண்டவன். அவள்

அவன்பால் கொண்ட அன்பு மாறும் தன்மையது அன்று. அவனிடம் கடுமையாக நடந்து கொள்ளுதலையோ, அவனைக் கடிந்து பேசுதலையோ அவள் விரும்பவில்லை. அதனினும் உயிரைத்துறத்தலே மேலென்று அவள் கூறுவது அவளது உள்ளம் எந்த அளவிற்கு நொந்து போயுள்ளது என்பதைப் புலப்படுத்தும்.

"நம் நலத்தைத்தா"வென்று கேட்கவேண்டுமென்று தோழிகூறுவது மரபாகும் என்பதை "மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்" (தொல்.கற்பியல் 9) என்னும் நூற்பா அடியால் அறியலாம். இது உளவியல் அடிப்படையில் அமைந்த மரபென்பதைச் சொல்லத் தேவையில்லை. இருவரும் ஒருவரையொருவர் விரும்பிச் சேர்தல் (Consensual sex) நிகழ்ந்ததன் பின் காரணத்தைக் கொண்டும் கொடுத்ததைத் திரும்பக்கேட்டல் அறமுமாகாது, பண்பாடும் ஆகாது என்பதைத் தலைவி வலியுறுத்துவது அவளது உயர்வற உயர்ந்த உள்ளத்தைப் புலப்படுத்தும்.

தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி தோழியிடம் "மாலைக்காலம் என்னைப்பெரிதும் துன்புறுத்துகிறது" என்பதை நுட்பமாகத் தெரிவிப்பதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் அரிய பாடலாகத் தருகிறார்.

நெடுநீர் ஆம்பல் அடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை
அகல்இலைப் பலவின் சாரல் முன்னிப்
பகலுறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுன் மாலை உண்மை
அறிவேன் தோழிஅவர்க் காணா ஊங்கே. *(குறுந்தொகை 352)*

தோழியே, ஆழமான நீரில் வளர்ந்த ஆம்பல் இலையின் புறத்தைப் போன்ற வளைந்த மெல்லிய சிறையையும், கூரிய நகங்களையும் உடைய வௌவால்கள் அகன்ற இலைகளைக் கொண்ட பலாமரங்களை உடைய மலைச்சாரலை நோக்கிப் பகற் காலத்தில் தாம் இருந்த பழைய மரம் தனிக்கும்படி அகன்று செல்லும் சிறிய புல்லிய மாலைக்காலம் உளதாதலை அத்தலைவரைக் காணாத காலத்தில் உணர்வேன்.

பகலில் உறைந்த பழைய மரத்தை விட்டுநீங்கி மாலைக்காலத்தில் பலா மரங்களை நாடிச்செல்லும் வௌவால்களைப் போன்று, தலைவன் தலைவியிடமிருந்து பிரிந்து சென்றுவிட்டான். மாலை

அவளுக்குச்செய்யும் துன்பத்தால் மாலைக்காலம் என்று ஒருபொழுது உண்டு என்பதை அவள் உணர்வதாகச் சொல்கிறாள்.

ஆறுவரிப்பாடலில் நான்கு வரிகள் வெளவால்களின் செயலைப்பேசுகின்றன. இரண்டு வரிகளே அவள்படும்பாட்டைப் புலப்படுத்துகின்றன.

"***காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி***

மாலை மலரும் இந்நோய்" என்றும்,

"***மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத***

காலை அறிந்த திலேன்" என்றும்

மாலை செய்யும் துயரைத் திருக்குறள் கூறும்.

வெளவால்கள் மாலையில் தாம் இருந்த மரத்தைவிட்டு வேறிடம் செல்லுதலை அகநானூறு, "பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன... மாச்சிறைப் பறவை பகலுறை முதுமரம் புலம்பப்போகி" என்று குறிப்பிடும்.

கணவனிடமிருந்து பிரிந்திருக்கும்போதே மாலைப்பொழுது என்று ஒன்று உண்டென்பதைத் தலைவி உணர்ந்ததாகக் கூறுவது அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டைன் காலம் பற்றிச் சொல்லிய உண்மையை நமக்கு நினைவூட்டும். காலவோட்டம் ஒருவரது அனுபவத்திற்கேற்ப மாறுபடும் என்பதை அவர் "ஓர் அழகிய பெண்ணின் அருகில் ஒருவர் அமர்ந்திருக்கும் ஐந்து நிமிடங்களுக்கும் அவர் அடுப்பின்மேல் அமர்ந்திருக்கும் ஐந்து நிமிடங்களுக்கும் வேறுபாடு உண்டு. முன்னது மிக்க குறைவாகவும் பின்னது மிக நீண்டதாகவும் தோன்றும்" என்று நகையுணர்வோடு கூறுவார். காலவுணர்வு ஒருவரது அனுபவத்திற்கேற்ப மாறுபடும் என்பதைக் காதலர் கூடியிருக்கும்போது பெறும் இன்பம், பிரிந்திருக்கும் போது ஏற்படும் துன்பம் ஆகியவற்றின் மேல் ஏற்றிக்கூறுகிறது இப்பாடல்.

மிளைப்பெருங்கந்தன் என்னும் புலவர் பாடல் தலைவியை நினைந்து புலம்பும் தலைவனை இடித்துரைக்கும் பாங்கன் கையாளும் உத்தியைச் சுட்டுகிறது.

காமம் காமம் என்ப; காமம்

அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்

முதைச் சுவல் கலித்த முற்றா இளம்புல்

மூதுஆ தைவந் தாங்கு

விருந்தே காமம் பெருந்தோ ளோயே! *(குறுந்தொகை. 204)*

"பெருந்தோள்களை உடைய தலைவனே, காமம் காமம் என்று அதுபற்றி அறியாதார் அதனை இகழ்ந்து கூறுவர். அக்காமம் என்பது துன்பமும் நோயும் அன்று. ஆராய்ந்து பார்த்தால் பழங்கொல்லையாகிய மேட்டு நிலத்தில் தழைத்த, முதிராத இளைய புல்லை முதிய பசு நாவால் தடவி இன்புறுதல்போல் அக்காமம் புதிய இன்பத்தை உடையதாகும்" என்பது பாங்கனின் கூற்று.

காமவுணர்வுபற்றிப் பாங்கன் தனது கருத்தைக்கூறித் தலைவனின் துன்பத்தைப்போக்க முயல்கின்றான். தொல்காப்பியக் களவியல் நூற்பா ஒன்று, "தலைவன் உற்றது உரைப்பக்கேட்ட பாங்கன் உலகத்தில் நிலைத்து நிற்கும் பண்புகளை அவனுக்கு அறிவுறுத்திக்கூறும்" கூற்றினைக்குறிக்கும். தலைவன் "ஒரு பெண்ணால் நான் இத்தகைய துன்பத்தில் உழல்கின்றேன்" என்று சொல்லவும், பாங்கன் "காமவுணர்வு பிறர் அணங்க வருவதன்று; அதுநோயும் அன்று. தன்னால் கறிக்க இயலாத இளம்புல்லைத் தடவிய அளவில் முதிய பசு இன்புறுதற்குக் காரணம் அப்புல்லின் சுவையன்று: பசுவின் ஆர்வமே. அதனுடைய விருப்பத்தின் அளவு அவ்வின்பம் நிற்றலைப்போன்று காமமானது நமது நினைப்பின் அளவு புதுமையின்பத்தைத் தருகின்றது. அதனை நம் அறிவினால் அடக்கி ஆளலாம். காமவுணர்வு இன்பம் தருவதன்று; நம் மனநிலையே அதனை விருந்தாக, புதிதாகத் தோன்றி விரைவில் அழியும் இன்பமாகத் தோற்றுவிக்கின்றது" என்று தனது விளக்கத்தை விரித்துரைப்பான்.

இக்கவிதைகளெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்றவை. ஆயினும் அவற்றிலிருந்து வெளிப்படும் அக்கவிஞர்களின் உளவியல் அறிவு வியப்புக்குரியது. அன்னார் இருபதாம் நூற்றாண்டில் மேலை உலகில் வாழ்ந்த உளவியல் அறிஞர்களின் கருத்துக்களையெல்லாம் உள்வாங்கிக்கொண்டு, அவை பற்றிய தம்முடைய ஆழ்ந்த சிந்தனைகளையும் இணைத்துக் கொண்டவர்போல் காட்சி அளிக்கக் காணலாம்.

திருக்குறளில் பொதுக்கூற்றுக்களும் பொருண்மை அடுக்கும்

முனைவர் **ம.திருமலை,**
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
கைபேசி: 9442158802.

தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளமாக (Cultural logo) இன்று வரை கொண்டாடப்பட்டு வருவது திருக்குறள். இந்நூல் தனிமனித, சமூக, அரசியல், ஒழுக்கங்கள் மேம்படுவதற்கான பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறுகிறது. திருக்குறள் ஓர் அற நூலாகத் திகழ்ந்து சமுதாயத்திற்கு வழிகாட்டும் சிறந்த பணியைச் செய்கிறது. அந்நூல் பல நூற்றாண்டுகளைக் கடந்து நிலைத்து நிற்பதற்கு அதன் சமூக உணர்வுதான் காரணமாக அமைகின்றது. "திடமான அடிகளில் குறள், எளிய, அறவியல் மானுடத்தின் விழுமியத்தை வகுத்துரைக்கிறது... உலக இலக்கியங்களில் இத்துணை உயர்ந்த ஆழ்ந்தகன்று நுண்ணறிவினைக் கொண்ட, குறள்களின் தொகுதி வேறெதனையும் காணோம்'' என்று பிரஞ்சு - ஜெர்மானிய இறையியல் கோட்பாட்டாளரும் மருத்துவரும் மனிதநேயச்சிந்தனையாளருமான ஆல்பர்ட் சுவைட்சர் (Albert schweitzer) 1935இல் வெளியிட்ட தனது 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்ற நூலில் குறிப்பிடுவது அனைவருக்கும் ஏற்புடைய கருத்தாகும். சமூகத்திற்கான வழிகாட்டுதல்களை வழங்கும் நூல் எனினும் அது செழுமையான இலக்கியத் தகுதியும் உரியதாகத் திகழ்கிறது. அற நூல்கள் பொதுவாக நேரடியாகவும் செறிவாகவும் கருத்துக்களை விளக்கும் மரபினை உடையவை; "அறம் செய விரும்பு" என்பதைப்போல!

வள்ளுவப் பேராசான் பல இடங்களில் நேரடியாகவும் செறிவாகவும் கூறுவதை அனைவரும் அறிவர். "கற்க கசடற", "கற்ற பின் நிற்க அதற்குத் தக," "செய்க பொருளை" என்பன போன்ற பல தொடர்கள் இவ்வாறு நேரடியாகவும் செறிவாகவும் கூறப்பட்ட தொடர்கள். திருக்குறள் நேரடியாகச் செய்திகளைக் கூறுகிறது; மறைமுகமாகவும் குறிப்பாகவும் செய்திகளைக் கூறி, வாசகனின் கற்பனைக்கும் பேரளவு இடமளிக்கிறது. வாசகன் முயன்று பன்முறை வாசித்துப் பொதுப்படையான கூற்றுகளின் வழியே நுட்பமான செய்திகளை உணர்ந்து கொள்ளும் வண்ணம் பல குறட்பாக்களை வள்ளுவப் பேராசான் அமைத்துள்ளார். அத்தகைய

குறட்பாக்களில் பல்வேறு அணிகள், பொதுக் கூற்றுக்கள் முதலியன அமைந்து காணப்படுகின்றன. குறிப்பிட்ட சொல், தொடருக்கு இதுதான் முற்ற முடிந்த பொருள் என்று வரையறுத்துக் கூறவியலாத தன்மையுடையனவாகப் பல குறட்பாக்கள் திருக்குறளில் இடம் பெற்றிருப்பதை அதனை ஆழ்ந்து கற்றோர் உணரக்கூடும். குறிப்பாகச் சொல்வதாக இருந்தால், ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மை அடுக்குகளை (different layers of meaning) கொண்டதாகக் குறட்பாக்கள் அமைந்திருக்கின்றன; திருக்குறளுக்கு அதிக எண்ணிக்கையில் உரைகள் எழுதப்பட்டமைக்கும் இதுவே காரணம். அத்தகைய குறட்பாக்கள் சிலவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

எவ்வம் உரையாமை:

திருக்குறளின் **'ஈகை'** என்னும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள பின்வரும் குறட்பா வாசித்து இன்புறத்தக்கது;

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே உள" ***(திருக்குறள், ஈகை, 223)***

இக்குறட்பாவிற்குக் கூறப்படும் பொருள் பின்வருமாறு;

1. உதவி கேட்டு வரும் வறியவன் ஒருவன் தன்னிடம் ஒன்றுமில்லை என்று கூறாமல் இருப்பதும், அவ்வாறு கூறிய வழிச் செல்வமுடையவன் எவ்வித மறுப்பும் கூறாமல் வழங்குவதும் போன்ற பண்புகள் மிக உயர்ந்த மனிதர்களிடம் காணப்படும் பண்புகளாகும். இது பொதுவாகக் கூறப்படும் பொருள். இக்குறட்பாவில் "உரையாமை" என்ற சொல் பொதுச்சொல்லாக அமைந்து பல்வேறு யூகங்களுக்கு இடமளித்துப் புதுப் பொருட்களைத் தரக்கூடிய சிறப்பிற்குரியதாக உள்ளது. குறட்பாவிற்கு மேற்கூறப்பட்ட பொருள் விளக்கமானது பரிமேலழகர் உரையை அடியொற்றியது.

2. "உரையாமை" என்ற சொல்லுக்கு வறியவன் தன் வறுமை குறித்து உரையாமை என்று பரிப்பெருமாள் விளக்குகிறார். "இல்லை என்று சொல்லுவதன் முன்னே குறிப்பறிந்து கொடுத்தல்"என்று பொருள் கூறுகிறார்.

3. பரிதியார் "உரையாமை" என்ற சொல்லுக்குப் பரிசில் பெற்ற வறியவன் பின்னர் வேறு ஒருவரிடம் சென்று "பொருள் இல்லை; உதவுக" என்று கூறாமல் எனப் பொருள் கொண்டு விளக்குகிறார். பரிசில் பெற்ற வறியவன் தன் வாழ்நாளில் எஞ்சிய காலத்தில் வேறு எவரிடமும் சென்று 'நான் வறியவன்' என்று சொல்லத் தேவையில்லாத அளவிற்கு

மிகுதியான பொருளைத் தருதல் என்பது பரிதியாரின் விளக்கம். உரையாமை என்ற சொல்லைப் பரிசில் பெற்றவன் மேலேற்றிக் கூறுவதால் இத்தகைய விளக்கம் கிடைக்கிறது.

4. "உரையாமை" என்ற சொல் குறித்து மேலும் சிந்தித்த பரிமேலழகர் பொருள் உடையவன், தன்னிடம் பொருள் கேட்டு வந்த வறியவனுக்குச் செல்வன் ஒருவன் "இப்போது என்னிடம் பொருள் இல்லை" என்று மறைத்துப் பொய் கூறாமல், வறியவனுக்கு ஈதல் என்று ஒரு பொருளைப் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.

5. 'இலன் என்னும் எவ்வம் உரையாமை'க்கு இராமானுசக் கவிராயர் வேறு வகையில் விளக்கம் தருகிறார். உடையவனாய் இருந்து பிற்காலத்தில் வறுமை எய்திய ஒருவன் தன்னிடம் வந்து இரந்தவனுக்கு 'நான் தரித்திரன்' ஆனேன் என்று துன்ப மொழிகளைக் கூறாமல் தன்னிடம் இருப்பனவற்றுள் சிறந்ததை வறியவனுக்குக் கொடுத்தல்' என்று ஒரு புதிய பொருள் கூறுகிறார். இதனால், கொடை செய்வதற்குப் பெரும் செல்வந்தனாக இருக்க வேண்டிய அவசியமில்லை; இருக்கின்ற அளவிற்குள் கொடை செய்யலாம் எனும் பொருள் இதன்வழிப் புலப்படுகின்றது. மகாபாரதத்தில் இடம் பெறும் 'கீரிப்பிள்ளை- வறிய அந்தணன்' கதையும் இதைக் கூறுகிறது. இதில் 'உரையாமை' என்ற சொல்லை உதவி கேட்கப்பட்ட செல்வனின் மேலேற்றி ஒரு புதிய பொருளைக் கவிராயர் கூறுகிறார்.

6. 'கவிராச பண்டிதர்' என்னும் உரையாசிரியர், 'ஒருவன் தனக்கு அறிவு, சிந்தனை, பொருள், உறவினர்கள் ஆகியவெல்லாம் தன்னிடத்து இல்லை என்று கூறாமல் வாழ வேண்டுமாயின் ஈகைப்பண்பு தேவை! ஒருவனுக்கு ஈகைப்பண்பு கைவரும்போது இவையெல்லாம் தானே வரும்' என்று ஒரு பொருளைத் தருகிறார். இவ்விளக்கமும் பரிசில் கொடுக்கக்கூடிய வள்ளலை மையமாக வைத்துக் கூறப்பட்ட விளக்கமாகும். "ஞானதியானம், பொருள், பந்துக்கள் முதலியன இல்லையே எனத் துன்பத்தோடு மொழியாத தன்மை ஈகையினால் வரும் அதுவும் உயர்ந்த குலமுடையவர்களிடமே உளது" என்று கவிராச பண்டிதர் கூறுகிறார்.

7. 'இலன் என்னும் எவ்வம் உரையாமை' என்பதற்கு வறுமையினால் துன்புற்ற ஒருவன் தன்னிடம் வந்து பொருளை வேண்டிப் பெற்றுச் சென்ற பிறகு, முன்னர் வழங்கியவன் பின்னர், பிறரிடத்தில் இதுகுறித்து எதுவும் கூறாமல் இருத்தல் என்ற ஒரு விளக்கத்தினை மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் குறிப்பிடுகிறார். மகாவித்துவான் தண்டபாணி

தேசிகர் விளக்கமானது உளவியல் நுட்பம் செறிந்தது. உதவி செய்த ஒருவன் எவ்வகையிலேனும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவே விரும்புவான்; இது உலக இயல்பு. அதே போல் ஒரு காலத்தில் உதவி பெற்றவன், பின்னொரு காலத்தில் செல்வந்தனாகத் திகழும் போது தனது பழைய வறுமையினை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பமாட்டான் இதுவும் உலக இயல்பு. அத்தகைய தருணத்தில், முன்னர் உதவியவன், 'இப்போது செல்வந்தனாக இருக்கும் இவன் முன்னொரு காலத்தில் வறுமையுற்ற நிலையில் என்னிடம் உதவி பெற்றவன்' என்று கூறினால் அது ரசபேதமுடைய கூற்றாக மாறிவிடும். புதிய செல்வந்தனை இழிவுபடுத்தியதாகவும் தோன்றும்! உதவி செய்தவனுக்கும் அது பெருமை தராது. உதவி செய்தவன் தான் செய்த உதவியை **மறைப்பதும்** உதவி பெற்றவன் தான் பெற்ற உதவியை - தன் முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்டவரை - **நினைவுகூர்வதும்** சிறப்பான பண்புகளாகும். "நன்னயம் செய்து விடல்" என்பதையும் இங்கு எண்ணிபார்க்கலாம். இப்பண்புகள் நடைமுறைக்கு ஒத்துவருமா? என்ற வினா பொதுவாசகருக்கு எழலாம். இருக்கின்ற நடைமுறைகளில் சிறந்தனவற்றைப் பேணிக்காப்பதும் சிறந்தனவாக இல்லாதவற்றை மாற்ற முயற்சி செய்வதும் தானே நல்லிலக்கியத்தின், அற இலக்கியத்தின் பணி என்ற கருத்தே இவ்வினாவிற்கு விடை!

மேலே குறிப்பிட்ட குறட்பாவில் **"இலனென்னும் எவ்வம் உரையாமை"** என்ற தொடர் ஒற்றைப் பொருள் கொண்டதல்ல; பல்வேறு விளக்கங்கட்கு இடமளிக்கும் பொதுத்தொடர்! எனவே, பல்வேறு உரையாசிரியர்கள் தத்தம் போக்கில் அதற்கு விளக்கம் கண்டனர். ஒரே தொடருக்கு ஏழுக்கு மேற்பட்ட விளக்கங்கள் கூற ஏதுவாக இத்தொடரின் அமைப்பு உள்ளது. இது மிகவும் சிறந்த புனைவு முறையாகும். 'உரையாமை' என்ற சொல்லை வெவ்வேறு இடங்களில் பொருத்திப் புதுப்புது விளக்கங்களைப் பல்வேறு உரையாசிரியர்கள் வழங்கியுள்ளனர். ஒரு சிறந்த கவிதை ஒரே பொருளை மட்டும் உணர்த்தி வாசிப்பு அனுபவத்தைத் தட்டையாக ஆக்கிவிடக்கூடாது; வாசகனின் அனுபவ உலகத்திற்கு ஏற்ப, காலத்தின் தேவைக்கு ஏற்பப் புதுப்பொருளைக் கூறுவதற்கு ஏற்ற கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். அதுவே, சிறந்த கவிதை. ஈகை அதிகாரத்தில் அமைந்திருக்கின்ற இக் குறட்பா சிறந்த கவிதையின் பண்புகளைக் கொண்டது என்பதில் ஐயமில்லை.

தொடர்ச்சி அடுத்த இதழில்

செந்தமிழ்க் கல்லூரி வைரவிழா

(1957-1958) - (2017-2018)

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பெறும் செந்தமிழ்க் கல்லூரியில் மார்ச் 17, 18 ஆகிய இரு நாட்களும் பாண்டியன் நூலகத்தின் மேல் தளத்தில் கல்லூரியின் வைரவிழாவினை முன்னிட்டு ரூபாய் 10,00,000 செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாண்டித்துரைத் தேவர் அரங்கத்தில் கல்லூரியின் வைரவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

17.3.2018 நிகழ்ச்சிகள்

காலை 10 மணியளவில் தொடக்கவிழா சங்கத் தலைவர் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்க, கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி மற்றும் சங்க செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா வரவேற்புரை நல்கினார்.

திரு.பாவல் நாகமணி அவர்கள் தனது தந்தையாரும், மேனாள் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினருமான திரு.வ.நாகமணி அவர்கள் நினைவாக ரூபாய் 2,00,000 வழங்கி 'வ.நாகமணி சௌந்திராதேவி அறக்கட்டளை' நிறுவினார்.

செந்தமிழ்க் கல்லூரி மேனாள் பேராசிரியர் பொன்.விஜயன் அவர்கள் தனது பெற்றோர் 'பொன்னையாத்தேவர் வைரக்கால் நினைவு அறக்கட்டளை' யை ரூபாய் 50,000 வழங்கி நிறுவினார்.

செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவியும் சிங்கப்பூரில் தமிழாசிரியையாகப் பணியாற்றி வருபவருமான சித்ராதேவி வாசுதேவன் தனது ஆசிரியர் பெயரில் 'பேராசிரியர் பொன்விசயனார் அறக்கட்டளை' யை ரூபாய் 50,000 வழங்கி நிறுவினார்.

செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவியும் இந்நாள் உதவிப்பேராசிரியையுமான முனைவர் ஜெ.போ.சாந்திதேவி தனது பெற்றோர் நினைவாக 'ஜெயபால்போஸ் மின்னல்கொடி அறக்கட்டளை'யை ரூபாய் 50,000 வழங்கி நிறுவினார்.

செந்தமிழ்க் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தினர் சங்கத்தின் சார்பாக 'மேனாள் மாணவர் சங்க அறக்கட்டளை'யை ரூபாய் 50,000 வழங்கி தொடங்கி வைத்தனர்.

யாதவர் கல்லூரி மேனாள் தமிழ்த்துறைப் பேராசிரியை முனைவர். சுசீலா கோபாலகிருஷ்ணன் நினைவாக அவரது கணவர் டாக்டர். கோபாலகிருஷ்ணன் அவர்கள் ரூபாய் 50,000 வழங்கி 'முனைவர் சுசீலா கோபாலகிருஷ்ணன் அறக்கட்டளை'யை நிறுவினார். மேற்கூறிய அறக்கட்டளைகள் அனைத்தையும் வேலம்மாள் கல்விக்குழுமத்தின் தலைவர் திரு.எம்.வி.முத்துராமலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

வைரவிழா மலரினை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் பி.பி.செல்லத்துரை அவர்கள் வெளியிட வேலம்மாள் கல்விக்குழுமத்தின் தலைவர் திரு.எம்.வி.முத்துராமலிங்கம் அவர்கள் நூல் முதல்படியை பெற்றுக்கொண்டார்.

துணைவேந்தர் தமது சிறப்புரையில் மதுரையின் சிறப்புக்கள் குறித்தும் தமிழ்ச்சங்கத்தின் பெருமைகள் மற்றும் பாண்டியன் நூலகத்தின் சிறப்புக் குறித்தும் பேசினார். சங்கத்தமிழர் பாரம்பரியத்தை இளந்தலைமுறையினர் அறியும் வகையில் அருங்காட்சியகம் அமைப்பதற்கு பல்கலைக்கழகம் ஆவன செய்யும் என்று தெரிவித்தார். மேலும் நான்காம் தமிழ்ச்சங்கத்திற்கும் செந்தமிழ்க் கல்லூரி மேம்பாட்டிற்கும் பல்கலைக்கழகம் எல்லா வகையிலும் துணை நிற்கும் என்று உறுதியளித்தார்.

திரு.எம்.வி.முத்துராமலிங்கம் அவர்கள் தனது சிறப்புரையில் தமிழ் பயிலும் மாணவர்களின் கல்வித்தரம் குறைந்து வருகிறது. எனவே மாணவர்களுக்கு தமிழார்வத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழ் கற்பிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

விழா பேருரையாற்றிய குன்றக்குடி ஆதீனம் தவத்திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள் 'தமிழ் செம்மொழி அந்தஸ்து பெற அடித்தளமிட்டவர்கள் பாஸ்கர சேதுபதியும் பொன்.பாண்டித் துரைத்தேவரும் ஆவர். தாய்மொழியில் கல்வி பரப்பிய நாடுகள் வெற்றி பெற்றுள்ளன. தாய்மொழி விடுத்து வேற்றுமொழியில் கல்வி கற்பித்து வரும் நாடுகள் ஏழ்மை நிலையை அடைந்துள்ளன. மொழியினை

அறிவியல் பூர்வமாகக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

உதவிப்பேராசிரியர் முனைவர் அ.நந்தினி அவர்கள் நன்றியுரை கூறினார். தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

பிற்பகல் 2.00 மணியளவில் சிவகாசி அய்யநாடார் ஜானகியம்மாள் கல்லூரியின் மேனாள் ஆங்கிலத்துறைத் தலைவர் பேராசிரியர் மு.ராமச்சந்திரன் நடுவராக பங்கேற்க **'மனித வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு பெரிதும் காரணம் அன்பா? அறிவா'** என்ற தலைப்பில் கல்லூரியின் மேனாள் மாணவர்கள் பங்கேற்ற கலகலப்பான பட்டிமன்றம் நடைபெற்றது. கல்லூரிக்குழுத் தலைவர் வழக்குரைஞர் ச.தசரதராமன் தலைமை வகித்தார். சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கலைக்கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வி.கிளாட்சன் மற்றும் உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரியின் உதவிப்பேராசிரியர் முனைவர் பெ.கவிதா முன்னிலை வகித்தனர். மேனாள் மாணவர் சங்கத்தின் தலைவர் திரு மு.இளங்கோவன் அவர்கள் வரவேற்புரை நல்கினார். **"அறிவே"** என்ற அணியில் கவிபாரதி அசோக்ராஜ், திரு.கணேஷ்ஆனந்த், முனைவர் தமிழ்க்கொடி, ஆகியோரும் **"அன்பே"** என்ற அணியில் புலவர் சங்கரலிங்கம், முனைவர் ராஜ்மோகன், முனைவர் ரேவதி சுப்புலெட்சுமி ஆகியோரும் பேசினர். கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் மேனாள் இணைப்பேராசிரியர் முனைவர் வாசுகி ஜெயரத்தினம் அவர்கள் நன்றியுரை கூறினார்.

18.3.2018 நிகழ்ச்சிகள்

18.3.2018 அன்று காலை 10 மணியளவில் பேராசிரியர் அப்துல்காதர் தலைமையில் **"வற்றாத நீரோட்டங்கள்"** என்ற தலைப்பில் சிறப்புக் கவியரங்கம் நடைபெற்றது. வாக்காளனின் விரல் மைத்துளி என்ற தலைப்பில் கவிஞர் க.செயமூர்த்தி அவர்களும், உழைப்பாளனின் வியர்வைத்துளி என்ற தலைப்பில் கவிஞர் ஜ.ஈஸ்வரி அவர்களும், பெண்களின் கண்ணீர்த்துளி என்ற தலைப்பில் கவிஞர் சுரா அவர்களும், வானின் மழைத்துளி என்ற தலைப்பில் கவிஞர் இரா.பாஸ்கர் அவர்களும், தியாகியின் இரத்தத்துளி என்ற தலைப்பில் கவிஞர் விஜயகுமார் அவர்களும், மது என்னும் நச்சுத்துளி என்ற தலைப்பில் கவிஞர்

பெ.கவிதாமோகன் அவர்களும், கவிதை வாசித்தளித்தனர். செந்தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் அ.தட்சிணாமூர்த்தி அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். வழக்கறிஞர் மா.அண்ணாதுரை, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ச.கவிதா, மேனாள் தமிழாசிரியர் கி.தனுக்கோடி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேனாள் மாணவர் மல்லி.கருப்பசாமி அவர்கள் நன்றியுரை கூறினார்.

....

பிற்பகல் 2 மணியளவில் கோவை அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் புல முதன்மையர், முனைவர் ந.வாசுகிராஜா அவர்கள் தலைமை வகிக்க, தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் (ப.நி.) நா.திரிவேணி, காவல்துறை ஆய்வாளர் திருமதி. மீனாம்பிகை, தமிழாசிரியர் இரா.நடனசுந்தரம் ஆகியோர் *முன்னிலை வகிக்க கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.* ம.கா.ப. உறுப்புக்கல்லூரி துணை முதல்வர் முனைவர் கரு.முருகேசனார் வரவேற்புரை வழங்கினார். சென்னை லயோலா கல்லூரி கலை இலக்கிய ஊடகத்துறை பேராசிரியர் காளீஸ்வரன் தலைமையில், மாற்று ஊடக மைய மாணவர்களின் **நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள்** நடைபெற்றன. தமிழாசிரியர் மா.சக்திகுமார் நன்றியுரை கூறினார்.

பட்டிமன்றம், கவியரங்கம், நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி ஆகிய இலக்கிய நிகழ்வுகளுக்கு மேனாள் மாணவர் சங்கத்தினர் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

....

மாலை 5 மணியளவில் நிறைவு விழா தொடங்கியது. கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி அவர்கள் முன்னிலை வகித்தார். உதவிப்பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி, வரவேற்புரை நல்கினார். மேனாள் பேராசிரியர் முனைவர் வீ.காந்திமதி அவர்கள் எழுதிய **"நான்காம் தமிழ்ச்சங்கம் வரலாறும் பணிகளும்"** என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி நூல் வெளியிட்டும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.திருமலை அவர்கள் நூல் முதற்படி பெற்றும் சிறப்புரை ஆற்றினர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் க.பாஸ்கரன்

விழா நிறைவுப் பேருரையாற்றினார். மேனாள் துணைவேந்தர் ம.திருமலை தமது சிறப்புரையில் 'வள்ளல் பாண்டித்துரைத் தேவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு காலம் கடந்தும் நிற்கும். சேதுபதி மன்னர்கள் தமிழுக்கு பல சேவைகளை செய்துள்ளனர். தங்கம் பவுன் ரூ.1க்கு விற்ற போதே பல அறிஞர்களுக்குப் பரிசாக தங்க நகைகளை வழங்கியவர்கள் சேதுபதி மன்னர்கள். வள்ளல் பாண்டித்துரை தேவர் எழுதிய நூல்களைப் பார்த்து, சைவ சித்தாந்த அறிஞர்கள் பலர் வியந்துள்ளனர். தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டு வரலாறு கடந்தும் நிற்கும். அத்தகைய மன்னர்கள் வரலாற்றை யாரும் முறையாகப் பதிவு செய்யவில்லை. இந்தக் குறை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆனால், தற்போது காந்திமதி எழுதிய இந்த நூல், நான்காம் தமிழ்ச்சங்கத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் மிக முக்கிய ஆவணமாகத் திகழும் என்றார்.

இதைத்தொடர்ந்து, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள்,

"தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற சொல் உருவான இடமே இத் தமிழ்ச்சங்கம்தான். பழந்தமிழ் நகரமான மதுரையில் நூற்றாண்டு கடந்த சில கல்லூரிகள் உண்டு. ஆனால் அவை மேலைக் கல்விமுறையை கற்பிக்கும் கல்லூரிகளாய் விளங்கியவை. செந்தமிழ்க் கல்லூரி ஒன்றே தமிழுக்கான தனித்தமிழ்க் கல்லூரியாக தொடங்கப்பட்டு இந்நாள் வரையில் செயல்பட்டு வருகிறது. தமிழுக்கான பல்கலைக்கழகத் தகுதியுடன் இருக்கும் ஒரே கல்லூரி செந்தமிழ்க்கல்லூரிதான். பல்கலைக்கழகங்கள் மட்டுமே அச்சகம் மற்றும் பதிப்புத்துறையுடன் இயங்கி வந்த காலகட்டத்தில் செந்தமிழ்க் கல்லூரி தொடங்கியபோதே அச்சகம் மற்றும் வெளியீட்டுத் துறையுடன் இயங்கியது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம், பல தரமான படைப்புகள் வெளிவந்துள்ளன. இக்கல்லூரி நூலகம் பல்வேறு ஆய்வாளர்களுக்கும் பயன்தரக்கூடியது. இங்குள்ள நூல்களே நானும், அறிஞர் சண்முகப்பிள்ளை அவர்களும் 1970-களில் திவாகரம் செம்பதிப்பில் ஈடுபட்டபோது ஆய்வு ஆதாரமாக விளங்கியது" என்று குறிப்பிட்டார்.

உதவிப் பேராசிரியர் முனைவர் ஜெ.கோகிலா நன்றியுரை கூறினார்.

சங்கச் செய்திகள்

01.02.2018 அன்று சங்க வளாகத்தில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. முதலாம் ஆண்டு இளங்கலை மாணவர் அழகுவேல் தமது உரையில், "மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பன்', 'நிமிடகவி', 'கவிக்கார்மேகம்', 'இணையிலாப் புலவன்', 'பிரபந்த மாமணி' எனப் பலவாறு புகழப்பட்டவர். திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப் புலவராகத் திகழ்ந்தவர். எழுபதுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியச் செல்வங்களைத் தமிழுலகுக்கு அளித்து, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றியவர் என்னும் பெருமை பெற்றவர். தமிழ்த்தாத்தா உ.வே.சா உள்ளிட்ட பலருக்கும் கல்வி நிழல் தந்த ஆல். சிவபக்தி, அடக்கம், விருந்தோம்பல், உயர்ந்த உள்ளம், கற்றாரைப் போற்றும் தன்மை ஆகிய நற்குணங்களைப் பெற்றிருந்தவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

01.02.2018 அன்று நாட்டுநலப்பணித்திட்டத்தின் சார்பாக மகளிருக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தொடு சிகிச்சை நிபுணர் ந.முத்துவீராச்சாமி அவர்கள் பங்கேற்று, உடல்நலம் பேணுதல் குறித்த விழிப்புணர்வு சொற்பொழிவும், இலவச மருத்துவப் பரிசோதனையும், ஆலோசனையும் வழங்கினார். நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

02.02.2018 அன்று சங்க வளாகத்தில் மு.இராகவையங்கார் மற்றும் நா.வானமாமலை ஆகியோரின் நினைவேந்தல் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவர் இரா.விக்னேஷ் மு.இராகவையங்கார் குறித்து தமது உரையில், "மூதறிஞர், 'செந்தமிழ்' இதழாசிரியர், பதிப்பாசிரியர், திறனாய்வாளர், வரலாற்று அறிஞர் எனப் பன்முக ஆளுமையுடையவர், மதுரை நான்காம்

தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்க் கலாசாலை, லயோலா கல்லூரி மற்றும் கேரளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றி மாணவர்களின் ஆராய்ச்சித் திறனுக்கு வித்திட்ட பேராசான், செப்பேடுகள், வடமொழித் தரவுகள், இலக்கண மேற்கோள் செய்திகள், நாட்டுப்புறவியல் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள், அகராதி இயல் தரவுகள் போன்ற பல்வேறு துறைசார்ந்த தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு முடிவுகளை நிறுவிய சிறந்த ஆய்வாளர்" என்று குறிப்பிட்டார். இளம் இலக்கியம் இரண்டாமாண்டு மாணவர் ப.கருப்புச்சாமி அவர்கள் தமது உரையில், "நா.வானமாமலை தமிழக நாட்டார் வழக்காற்றியலின் தந்தை, 'நெல்லை ஆய்வுக்குழு' அமைத்தவர். 'ஆராய்ச்சி' எனும் ஆய்விதழைத் தொடங்கியவர். 'கதைப்பாடல்கள்' எனும் புதிய சொல்லாடலை அறிமுகப்படுத்தியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மு.இராகவையங்கார் மற்றும் நா.வானமாமலை ஆகியோரின் திருஉருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

05.02.2018 அன்று முற்பகல் 10.00 மணியளவில் சங்க வளாகத்தில் ஆஸ்திரேலியக் கவிஞர் தம்பிப்பிள்ளை நந்திவர்மன் அவர்களின் 'எழில்பூக்கள்' என்னும் கவிதை நூல் மற்றும் இசைக்குறுந்தகடு வெளியீட்டு விழா நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு சர்வோதய மண்டல் தலைவர் திரு.க.மு.நடராஜன் அவர்கள் விழாத்தலைமை உரையாற்றினார். கவிதை நூல் முதற்பிரதியைக் காந்திய சிந்தனைக் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் எஸ்.முத்துலட்சுமி அவர்கள் பெற்றுக் கொண்டார். மதுரை காந்தி அருங்காட்சியகத்தின் செயலாளர் முனைவர் மா.பா.குருசாமி அவர்கள் நூல் நயவுரை வழங்கினார். செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் அதிவீரபாண்டியன், பெ.கிருஷ்ணவேணி, த.கார்த்திகா, ம.சுகன்யா, ஜெ.செல்வராணி, பா.ஸ்ரீதேவி ஆகியோர் கவிதை வாசித்தனர். செந்தமிழ் மற்றும் பிற கல்லூரிப் பேராசிரியர்கள், தமிழார்வலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

07.02.2018 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் பாண்டியன் நூலகத்தில் வாசகர் வட்டம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தலைமையும், துணைமுதல்வர் முன்னிலையும் வகித்தனர். முதுகலை இரண்டாமாண்டு மாணவி சி.இராமேஸ்வரி 'நா.பார்த்தசாரதியின் பொன்விலங்கு' நூல் வாசிப்பு அனுபவத்தைப் பகிர்ந்தார். நிகழ்ச்சியை நூலகர் தி.பிருந்தா ஒருங்கிணைத்தார்.

12.02.2018 அன்று ஜி.யு.போப் அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. முதுகலை முதலாமாண்டு மாணவி ஜெ.செல்வராணி அவர்கள் தமது உரையில் "ஜி.யு.போப் அவர்கள் சமயப்பணி, கல்விப்பணி மற்றும் தமிழ்ப்பணியாற்றியவர். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹீப்ரு, இலத்தீன் எனப் பன்மொழியறிவுடையவராக இருந்தபோதிலும், தமிழ் மீது கொண்ட காதலால், 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்' எனத் தனது கல்லறையில் எழுதச் சொன்னவர். தன்னை ஒரு தமிழ் மாணவனாக அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பியவர். திருக்குறள் மற்றும் திருவாசகம் மொழிபெயர்ப்பின் வாயிலாகத் திருவள்ளுவரையும் மாணிக்கவாசகரையும் உலகறியச் செய்த பெருமைக்குரியவர்" என்று குறிப்பிட்டார். முன்னதாக ஜி.யு.போப் அவர்கள் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

21.02.2018 அன்று முற்பகல் 10.00 மணியளவில் அனைத்துலகத் தாய்மொழி தின விழா செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியும் இந்திய கலாச்சார நட்புறவுக்கழகமும் இணைந்து சங்க வளாகத்தில் கொண்டாடப்பட்டது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழாவினை முன்னிட்டு நடத்தப் பெற்ற பேச்சுப் போட்டியில் இளங்கலை மூன்றாமாண்டு மாணவியர் த.கார்த்திகா முதல் பரிசும், பெ.கிருஷ்ணவேணி இரண்டாம் பரிசும் பெற்றனர். கட்டுரைப் போட்டியில் முதுகலை முதலாமாண்டு மாணவி ஜெ.செல்வராணி முதல் பரிசும், இளங்கலை மூன்றாமாண்டு மாணவி த.கார்த்திகா இரண்டாம் பரிசும் பெற்றனர். மதுரை அகில இந்திய

வானொலி நிலைய இயக்குநர் திருமதி.ஜோதிமணி இளங்கோவன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

21.02.2018 அன்று பிற்பகல் 1.00 முதல் 2.00 மணிவரை மதுரை அகில இந்திய வானொலிப் பண்பலை ஒலிபரப்பில் தாய்மொழி தினத்தினை முன்னிட்டு 'வளாக சந்திப்பு' நேரலை நிகழ்ச்சியில் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்களும், நூலகரும் மாணவர்களும் பங்குபெற்றனர்.

26.02.2018 அன்று நாட்டுநலப்பணித்திட்டத்தின் சார்பாக எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு கல்லூரியில் நடைபெற்றது. பொதுச்சேவையாற்றிவரும் திரு.பாலா அவர்கள் எய்ட்ஸ் விழிப்புணர்வு சிறப்புரையாற்றினார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

" பாவலர் போற்றிய காவலர்"

நீராலும் நெருப்பாலும் சிதலை யாலும்
நிலைகுலைந்த சுவடிகளை தேடித் தேர்ந்து
சீராலும் சிறப்பாலும் தெளிவினாலும்
செம்மையுறப் பலநூல்கள் திகழச் செய்தார்
பேராரும் புலவர்பலர் வரைந்த நூல்கள்
பதித்திடவே பொருளுதவிப் பேணிக் காத்தார்
தீராத தமிழ்க்காதற் சளிப்பில் நன்கு
திளைத்திட்டார் தேவரவர் திறந்தான் என்னே.

- புலவர் திருமிகு. சி.இராமசாமி

ஏப்ரல் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

ஔவை.துரைசாமிப்பிள்ளை
(ஏப்ரல்.3)

பாரதிதாசன்
(ஏப்ரல்.21)

கந்தர்வன்
(ஏப்ரல்.22)

வ.சுப.மாணிக்கம்
(ஏப்ரல்.23)

ரா.பி.சேதுப்பிள்ளை
(ஏப்ரல்.24)

ச.தண்டபாணி தேசிகர்
(ஏப்ரல்.25)

சாலினி இளந்திரையன்
(ஏப்ரல்.28)

உ.வே.சா
(ஏப்ரல்.28)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**	முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**	முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**	முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**	முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**	முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**	முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1